# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 5 இதழ் : 1 டிசம்பர் 2025




SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

# உங்கள் கனவு இல்லம் இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!




SREE VISALAM CHIT FUND LTD
SVCF
ESTD 1947
79 YEAR

## 1 இலட்சம் சீட்டு முதல் 1 கோடி சீட்டு வரை....

ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

79th YEAR

**நம்பிக்கை, நாணயம், நேர்மை**

நிலையான தன்மையுடன், வாடிக்கையாளர் சேவையில்...

எங்களை, ஊக்குவிக்கும் வாடிக்கையாளர்கள்

**அனைவருக்கும் நன்றி**

+91 8667003356 | 04565 283 477 WWW.SREEVISALAM.COM

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356

நகரத்தார் வாசிப்பில் ஓர் அங்கமாக அனைவரது
மேலான ஆதரவுடன்

# 5 வது

ஆண்டில் அடியெடுத்து
வைக்கிறோம்.
தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள்
அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை
தெரிவித்து கொள்கிறோம்.

## நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

www.naamnagarathar.com

97917 76534



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

டிசம்பர் 2025

மலர் : 5  இதழ் : 1

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.


---


**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534


---


கட்டுரைகள் மற்றும் இதர

படைப்புகளுக்கு

படைப்பாளர்களே பொறுப்பு.

விளம்பரங்கள் விளம்பரதாரரின்

பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...



## ஐந்தாம் ஆண்டில் நாம் நகரத்தார் மின்னிதழ்.

வாசகர்களுக்கு அன்பு வணக்கம்...!

வெற்றிகரமாக இம்மாதம் தனது இதழியல் பயணத்தில் ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது உங்கள் நாம் நகரத்தார் மின்னிதழ்.

ஒரு சிறு தாவரம் போல் தோன்றியது இன்று தனக்கென்று ஓர் இடத்தை அந்தச் சிறு தாவரம் உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

அனைவரது அபரிமிதமான அன்பும், ஒத்துழைப்பும் காரணமாக எதிர்பார்த்ததை விட மிக அதிகமான அளவில் உலகளவிலான நகரத்தார் பெருமக்களிடம் நாம் நகரத்தார் மின்னிதழ் சென்று சேர்ந்தது. வாசகர்கள் அனைவரிடமும் இந்த புதிய முயற்சிக்கு பெரிய வரவேற்பு இருந்தது.

இன்று வரை உங்கள் அனைவரது ஒத்துழைப்பால் உலகளவில் நகரத்தார் பெருமக்களை வாட்ஸப், முகநூல், டிவிட்டர் போன்ற சமூக ஊடகங்கள் வாயிலாக வெற்றிகரமாக சென்றடைந்து கொண்டிருக்கிறது. உண்மையில், இது நாம் நகரத்தாரின் மின்னிதழின் வெற்றியல்ல, இது முழுக்க முழுக்க வாசகர்களாகிய உங்களது ஈடுபாட்டால், பங்களிப்பால், பகிர்வுகளால் தொடர்ந்து நீங்கள் அளித்து வரும் ஆதரவால் மட்டுமே சாத்தியமான ஒரு வெற்றி.

இந்த உறவுக்காக உளமார உங்களுக்கு இருகரம் கூப்பி நன்றி தெரிவிப்பதோடு, உங்கள் நம்பிக்கையைத் தொடர்ந்து தக்கவைக்கும் வகையில் செம்மையான பாதையில் பயணிக்கும் என்று உறுதியை எங்கள் சார்பில் உங்களிடம் கூறுகிறோம்.

நமது மின்னிதழில் கவிதை, பண்பாடு, ஆன்மிகம், சமையல், பங்குசந்தை, வணிகம், உணவு, ஜோதிடம், இலக்கியம், வாழ்வியல் என பல்வேறு தலைப்புகளின் கீழ் படைப்புகள் சுருக்கமாக எளிதில் படிக்கும் வகையில் இருப்பது தனி சிறப்பு.

நாம் நகரத்தார் மின்னிதழில் வெளிவரும் செய்திகள், கதைகள், வரலாற்றுத் தகவல்களை பலரும் மற்றவர்களுக்கு வாட்சப்பிலும் ஏனைய சமூக வலைத் தளங்களிலும் பகிர்வது மட்டுமின்றி, வளரும் இன்றைய தலைமுறையினரிடம் செய்திகள் குறித்து விவாதிப்பது, வரலாற்று நிகழ்வுகளையும் எடுத்துக் கூறுவது போன்ற செயல்கள் நம்மின்னிதழை மேலும் செம்மையாக்குவதோடு எங்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தருகின்றன.

நாம் நகரத்தார் மின்னிதழ் இந்த நான்கு வருட காலத்தில் அனைவரது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கேட்டு நமது மின்னிதழில் தேவையான மாற்றங்களை அவ்வவ்போது செய்த வண்ணம் இருக்கின்றோம்.

தற்போது இந்த இதழ் அனைவரும் தங்கள் கைபேசி வாயிலாகவும், இணைய வலைத்தளத்திலும் பதிவிறக்கம் செய்து எளிதில் படிக்கும் வகையில் மின்னிதழாக வடிவமைக்க பட்டுள்ளது. மேலும் நமது மின்னிதழ் வாசகர்கள் வசதிக்காக தங்கள் விருப்ப நேரத்தில் படிக்கும் வகையில் மின்னிதழின் MOBILE APP தற்போது உலகளாவிய பாட்டில் உள்ளது .

ஐந்தாம் ஆண்டில் தடம் பதிக்கும் இந்த வேளையில் இதழின் தொடக்கம் முதல் எங்கள் முயற்சிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் வளர்ச்சிக்கு உதவிகள் செய்து வரும் திரு. உமாபதி அருணாசலம் – மேலாண் இயக்குநர். ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் பி லிட் பள்ளத்தூர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் புத்தக ஆக்க பணியில் தொடர்ந்து தங்கள் பங்களிப்பை செவ்வனே செய்து வரும் எழுத்தாள நண்பர்களுக்கும், விளம்பரங்கள் அளித்து எங்களது வளர்ச்சியில் உறுதுணையாய் இருக்கும் வணிக நிறுவனங்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளங்களில் மின்னிதழை பகிர்ந்து உதவும் நகரத்தார் சமூக இணைய வலைத்தள குழுக்களின் நிர்வாகிகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

பிள்ளையார் நோன்பு நகரத்தார் மக்களுக்கு மிக முக்கிய நிகழ்வு. இந்த வருட பிள்ளையார் நோன்பு வரும் இந்த மாதம் 25.12.2025 அன்று வரவிருக்கிறது. அதனையொட்டி ஐந்தாம் ஆண்டை தொடங்கும் நம் இதழின் இம்மாத பதிப்பு பிள்ளையார் நோன்பு சிறப்பிதழாக மலர்கிறது.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும்.

நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடங்கிய எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம். "இது நமது பத்திரிக்கை, நம் எண்ண வெளிப்பாடு" என்று நாம் அனைவரும் கொண்டாட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

நமது நாம் நகரத்தார் மின்னிதழ், அனைத்து நகரத்தாரிடமும் சென்றடைய வேண்டும். அதனால், சமூகத்தில் நல்ல பல மாற்றங்கள் நிகழ வேண்டும் என்பதே நம் எங்களின் எண்ணம். இந்த இதழ் நம் நகரத்தார் சமூகக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையை வளர்க்கும் விதமாகவும், படிப்பவர்கள் பல்துறை செய்திகளை படித்து பயனுறும் வகையிலும் தனது பணியினை தொடரும்.

இந்த இதழ் நம் நகரத்தார் சமூகக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையை வளர்க்கும் விதமாகவும், படிப்பவர்கள் பல்துறை செய்திகளை படித்து பயனுறும் வகையிலும் தனது பணியினை தொடரும்.

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்




PALLATHUR MOTORS LLP
SWITCH TO THE FUTURE
PETROL
RIDER LIFE
SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !
PETROL STATION
ELECTRIC
RIDER LIFE
SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!
ELECTRIFY YOUR
JOURNEY NOW
Go far and wide with just
a single charge
LECTRIX
Book Your
TEST DR!VE
Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI 2005

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

## எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு

## ரூ. 1,00,000/- முதல்

## ரூ. 30,00,000/- வரை

அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம் 2005

94439 86143

## TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.

## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6–வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மென்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichits.com

★ வாய்மையே வெல்லும் ★

**உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும் உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.**

## வினைகள் தீர்க்கும்

# வேல்மாறல்

## மகா மந்திரம்

(வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் தொகுத்தருளியது)




**தினமும் பாராயணம் செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக**

- வேல் வழிபாடு
- வேல் மாறல் பொருள் விளக்கம்
- வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
- முருகனின் முதற்கற்றளிக் கோயில் என பல்வேறு தகவல்களுடன்

விலை ரூபாய் **46/-** தபால் செலவு தனி

வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை

புத்தகத்தினை ஆர்டர் செய்ய :

**96590 32994**

எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

**தினமும் வேல் மாறல் பாராயணம் செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்**

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- வாங்கியது நினைவில் இல்லை! கொடுத்தது நினைவில் உண்டு! – அரிமழம் ப.செல்லப்பா. .................. 14

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் ..................... 25

**சமையல்**

- பிள்ளையார் நோன்பு பலகாரங்கள் .............................. 31

**கவிச்சோலை**

- இழையின் தனித்துவம் அதுவே மகத்துவம் – தஞ்சை பழ வள்ளியப்பன். ..... 38
- அந்தமானைப் பாருங்கள் ... அழகு ..! – கவிஞர் எம்.சோலை காரைக்குடி..... 71
- சுப்பிரமணிய பாரதி ( தீ ) – அரு. சிவகாமி இராமனாதன் ஒக்கூர் .......... 99

**சிறப்புப் பக்கம்**

- நம்பிக்கை தரும் தும்பிக்கையான் நோன்பு ..!! –இராம.நா. இராமநாதன் – ஆ.தெக்கூர் ............................ 39

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி ............ 56

**படித்ததில் பிடித்தது**

- பணம் முக்கியமா? நேரம் முக்கியமா?.......................... 62

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA .......... 70

**ஆன்மீக சிந்தனை**

- நோற்பது கைவிடேல் – முத்தப்பன் இராமநாதன் மேலைச்சிவபுரி .......... 74

**பங்குசந்தை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்... க.ஹர்ஷவர்த்தினிஶ்ரீ........... 79

**ஜோதிடம்**

- விநாயகரும் கேது பகவானும் –ஜோதிடர் எல்லி ....................... 91

**நிதி மேலாண்மை**

- Carbon capture and storage (CCS)/ Carbon Credits. – கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) ............................ 100

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

5

## "நாம் நகரத்தார் மின்னிதழின் தொடரும் இதழியல் பயணத்திற்கு இனிய வாழ்த்துகள்"

வெற்றிகரமாக தனது 5 ம் ஆண்டு இதழியல் பயணத்தை தொடங்கும்

" நாம் நகரத்தார் " மின்னிதலுக்கு, இந்த சிறப்பான தருணத்தில், எங்கள் ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பாக இதழ் குழுவினருக்கும், அன்பு வாசகர்களுக்கும் இதயம் கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

நகரத்தார் சமூகத்தின் வரலாறு, பாரம்பரியம் தொடர்பான செய்திகள் ஆகியவற்றை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணம் வெளிவரும் இந்த மின்னிதழ் உண்மையில் காலத்தால் தேவைப்படும் ஓர் ஊடகம் ஆகும்.

தரமான கட்டுரைகள், இளைஞர்களுக்கான ஊக்கப் பதிவுகள், சமூகச் செய்திகளால் இதழ் இன்று ஒவ்வொரு குடும்பத்திற்கும் நெருக்கமான துணையாக உள்ளது.

நாங்களும் ஒரு நிதி நிறுவனமாக, "சமூக வளர்ச்சியே எங்கள் வளர்ச்சி"என்ற எண்ணத்துடன், இதழின் பயணத்தில் தோளோடு தோள் சேர்ந்து நிற்பதில் பெருமை கொள்கிறோம். சமூக முன்னேற்றம், கல்வி, தொழில், நிதிஒழுக்கம் போன்ற துறைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் இதழின் முயற்சி பாராட்டத் தக்கது.

விளம்பரத் தளமளித்து எங்கள் சேவைகளை சமூகத்திடம் கொண்டு செல்ல உதவிய இதழ் குழுவிற்கும், நம்பிக்கையோடு ஆதரவளிக்கும் வாசகர்களுக்கும் அன்பு கலந்த நன்றிகள் .

வரும் ஆண்டுகளில் மேலும் பல புதுமைகள், தொழில்நுட்ப மேம்பாடுகள், புதிய எழுத்தாளர்கள் மூலம் இதழ் இன்னும் உயரங்களை எட்டும் என்பதை நம்புகிறோம்.

நாம் நகரத்தார் மின்னிதழ் "நம் சமூகத்தின் குரல்" ஆக பல தசாப்தங்கள் தொடர்ந்து ஒவ்வொரு மனதையும் தொட்டிட வாழ்த்துகிறோம்.

வளர்க "நாம் நகரத்தார்" மின்னிதழ் உலகில்!
வரலாறு படைத்திடுக பத்திரிக்கை உலகில்!

அன்புடன்

அரு .உமாபதி
மேலாண் இயக்குநர்
ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் லிமிடெட்
பள்ளத்தூர்



# வாங்கியது நினைவில் இல்லை!

## கொடுத்தது நினைவில் உண்டு!



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

மனிதர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தாங்கள் வாங்கியதை திருப்பிக் கொடுக்க மறந்து விடுவார்கள். ஆனால் தாங்கள் மற்றவர்களுக்கு கொடுத்ததை மட்டும் மறக்க மாட்டார்கள். இந்த மனநிலை பொதுவாக மனிதர்களிடம் நிறைந்து கிடக்கிறது. கடன் வாங்கியவர்கள் பணத்தை திருப்பிக்கொடுக்க வேண்டும் என்று நினைப்பதேயில்லை.



தாங்கள் வாங்கியது கடன் தான் என்பதை ஏனோ மறந்து போவார்கள். பரிதாபப்பட்டு, உதவ வேண்டும் என்ற நோக்கில் வட்டியின்றி கடன் கொடுத்தவன் அல்லல்பட்டு, கடன் பெற்றவன் வீட்டிற்குச் சென்று, தட்டையேந்தி, "ஐயா என்னிடம் வாங்கிய கடன் தொகையை கொடுத்து என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று வேண்டிக்கொள்ளும் நிலையை உருவாக்கி விடுகிறார்கள் கடன் பெற்றவர்கள்.

எங்கள் ஊரில் நாங்கள் சிறுவர்களாகத்திகழ்ந்த போது,வீடுகளில் கிணறு இருக்கும். அதில் இருந்து தான் நீரை இறைத்துக் குளிக்கவும், துவைக்கவும், மற்ற தேவைகளுக்கும் பயன்படுத்த வேண்டும். அப்படி ஒரு முறை கிணற்றில் தண்ணீர் இறைக்கும் பொழுது,எனது சகோதரி கயிற்றை தவற விட்டதால், கிணற்றுக்குள் வாளியோடு கயிறும் விழுந்துவிட்டது.

உடனே என் தாயாரிடம் போய் விவரத்தைச்சொன்ன போது, சரிடா, நீ போய் அடுத்த வீதியிலுள்ள நாச்சியப்பச்செட்டியார் வீட்டில் போய் "பாதாளக் கரண்டியை" வாங்கிவா! என்று சொல்லி என்னை அனுப்பி வைத்தார்கள்.

நான் போய் நாச்சியப்பச் செட்டியாரிடம்,"ஆத்தா பாதாளக்கரண்டி வாங்கி வரச்சொன்னார்கள்!" என்றேன்.

சரி தம்பி,"நல்லாத்தரேன்" ஆனால் ஒன்றை மட்டும் ஞாபகமாக வைத்துக்கொள், "வாங்கிப்போகும் பாதாளக் கரண்டியை, உங்கள் தேவை முடிந்தபிறகு, அப்படியே போட்டுவிட்டு போய் விடுவீர்கள்! திருப்பிக் கொண்டு வந்து கொடுக்க மாட்டீர்கள்"என்றார். அதனால் நீ போய் உன் ஆத்தாவிடம் சொல்லி கை கால் கழுவும் செம்பை கொண்டு வந்து இங்கு வைத்துவிட்டு,பாதாள கரண்டியை எடுத்துக் கொண்டு போ என்றார்.

நானும் அவர் சொன்னபடியே கிணத்தடியில் கிடந்த பித்தளைச் சொம்பை கொண்டுபோய் அவர் வீட்டில் வைத்துவிட்டு, பாதாளக் கரண்டியை வாங்கி வந்தேன். பாதாளக்கரண்டியின் உதவியோடு கிணற்றில் விழுந்த வாளி மற்றும் கயிற்றை எடுத்த பின்பு,

எல்லோரும் செய்வது போல பாதாள கரண்டியை கிணத்தடியிலேயே போட்டு விட்டு அடுத்த வேலையைப் பார்க்க போய்விட்டோம்.



மறுநாள் வெளியே போய் விட்டு வந்த பின்பு கைகால் கழுவச் சொம்பைத் தேடிய போதுதான், அந்தச்சொம்பு நாச்சியப்பச் செட்டியாரிடம் கொண்டு போய் கொடுத்தது நினைவுக்கு வந்தது.

அதன்பின் இரவல் வாங்கி வந்த பாதாளக் கரண்டியைத் தேடினேன். அதுவோ ஒரு செடியின் அடியில் கேட்பார் அற்றுக்கிடந்தது.

உடனே அதை எடுத்துக்கொண்டு நாச்சியப்பச்செட்டியார் வீட்டிற்குச் சென்று,ஐயா இந்தாங்க உங்க பாதாளக் கரண்டி என்று கொடுத்து விட்டு,நான் வைத்துவிட்டுப் போன பித்தளைச்சொம்பை எடுத்துக் கொண்டு நான் செல்ல முற்பட்டபோது, என்னை அழைத்து நாச்சியப்பச்செட்டியார் சொன்னது, "தம்பி பாதாளக்கரண்டியின் வேலை நேற்றே உனக்கு முடிந்துவிட்டது, அதைக் கொண்டு வந்து என்னிடம் நேற்றே கொடுத்திருக் கலாம் ஆனால் கொடுக்க மறந்து விட்டிர்கள். என்னிடம் நீங்கள் கொடுத்த உங்களது பித்தளைச் சொம்பு மட்டும் இல்லாமல் போய் இருந்தால், நீங்கள் பாதாளக் கரண்டியை கொண்டு வந்தே கொடுத்திருக்க மாட்டீர்கள். நீங்கள் வசதியாக அதை மறந்தே போய் இருப்பீர்கள் என்றார். அவர் சொன்ன வாசகம் சிறிய வயதிலேயே என்னைச் சிந்திக்க வைத்தது.

எல்லோரும் செய்வது போல பாதாள கரண்டியை கிணத்தடியிலேயே போட்டு விட்டு அடுத்த வேலையைப் பார்க்க போய்விட்டோம்.

ஆம் நண்பர்களே இன்றைக்கு வங்கிகளில் நகைவைத்து பலரும் கடன் வாங்குகிறார்கள். வாங்கிய பின்பு அதற்குரிய வட்டியும் கட்டுவதில்லை, அசல் கடன் தொகையைக்கட்டவும் முயற்சிப்பதேயில்லை. ஒரு ஆண்டு காலம் வரை பொறுத்திருந்த வங்கி நிர்வாகம், கடன் வாங்கியவர் களுக்கு நினைவூட்டும் கடிதம் அனுப்பிய பிறகுதானே, பலருக்கும் வங்கியிலே கடன் வாங்கியது நினைவுக்கு வருகிறது. உடனே வங்கிக்குச் சென்று பழைய கடனையும் வட்டியையும் அடைக்கிறார்கள்.




தாங்கள் வாங்கியதை சுலபமாக மறந்து விடுவது மனிதனின் இயல்பாகத் திகழும் பொழுது, கடனுக்கு ஈடாக எதையாவது வாங்கி வைத்தால் மட்டுமே மனிதனுக்கு நினைவுவரும் என்பது சரியான அணுகுமுறை தானே!

மார்க் ட்வெய்ன் என்ற அறிஞர் தன்னிடமிருந்த பழைய குடை ஒன்றைக் கழிப்பதற்கு தான் எவ்வளவு சிரமப்பட்டேன் என்பதை நகைச்சுவையாக பதிவு செய்துள்ளார் பாருங்கள்.



என்னிடமிருந்த ஒரு குடை அது பழையது என்றாலும் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்தது. அதைக் கொண்டு போய்த் தொட்டியில் போட்டேன். அந்தத் தொட்டியைச்சுத்தம் செய்யச் சென்ற யாரோ அந்தக்குடை என்னுடையது தான் என்பதை அடையாளம் கண்டு கொண்டு, அதை என்னிடம் கொண்டுவந்து ஒப்படைத்தார்கள். அதன்பின் அந்தக்குடையை கிணற்றில் தூக்கி எறிந்தேன். சிலநாட்கள் கழித்து அந்தக்கிணற்றை பழுது பார்க்க வந்தவர்கள், அந்தக் குடையை எடுத்து வந்து மீண்டும் என்னிடம் கொடுத்து விட்டனர். இப்படிப்பல வழிகளிலும் முயன்று பார்த்து முடியாமல் போனபின்பு, அந்தக் குடையை என் நண்பன் ஒருவனுக்கு இரவல் கொடுத்தேன். என்ன ஆச்சரியம் பாருங்கள், அதன்பின் அந்தக்குடை திரும்பி என்னிடம் வரவேயில்லை!"என்று குறிப்பிடுகிறார்.

பொதுவாக வாங்கியதைத் திருப்பிக்கொடுக்கின்ற பழக்கம் மறந்தே போனது. நாம் புரிந்த புன்னகையை நினைவில் வைத்துக் கொள்ளும் மனிதன், தான் ஏற்படுத்திய தழும்புகளை வசதியாக மறந்து விடுகிறான்.நமக்கு நம்முடைய பொருட்கள் பெரிதாக இருக்கின்றன. மற்றவர்களின் உடமையோ மிகச்சொற்பமாக இருக்கின்றன.ஒருவனிடம் பெற்றதைத் திருப்பித் தராமலேயே வைத்துக் கொள்வது என்பது மிகவும் கீழான மனோபாவம்.

வாங்கியதைத் திருப்பித் தருபவர்கள் நேர்மையாளர்கள். இத்தகைய நேர்மையாளர்கள் கூட சில நேரத்தில் அடுத்தவர்களிடம் இரவல் வாங்கிய புத்தகங்களைத் திருப்பித்தர வேண்டியது இல்லை என்றே நினைக்கிறார்கள்.



ஒரு பாத்திரத்தை வாங்கினால் அதை எப்படி வெறுமனே திருப்பித் தருவது என்று யோசித்து, அதில் சில இனிப்புகளைப் போட்டுத் திருப்பித்தருவார்கள்.ஒரு புத்தகத்தை இரவல் வாங்கினால், அதற்கு அழகாக ஒரு அட்டை போட்டுத்திருப்பித் தருவார்கள். அதுதான் அவர்களின் பங்களிப்பு மட்டுமல்ல அதுவே பண்பாடு.



ஒன்றைமட்டும் நினைவிலே வையுங்கள் நண்பர்களே! இந்த பூமியில் இவ்வளவு நாட்கள் நாம் வாழ்கிறோமே! அதற்குப் பிரதிபலனாய் நாம் எதைத் திருப்பிச் செலுத்தப் போகிறோம்? இந்த பூமிக்கு என்று எண்ணிப்பாருங்கள். அப்போது தான் நாம் வாங்கியது மறக்காது. கொடுத்தது மறக்கும்.

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே! என்ன சரிதானே!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com

# துபாய் நகரத்தார் சங்கம்

## 2025-2026 நிர்வாக குழுவினர்



**சோலை சுப்பிரமணியன்**
மேலைச்சிவபுரி
தலைவர்



**டாக்டர் முரு. முத்தையா**
கோட்டையூர்
உப தலைவர் (இந்தியா)



**சோமசுந்தரம் சுப்ரமணியம்**
வலையபட்டி
உப தலைவர்



**அருணாச்சலம் பழனியப்பன்**
மதகுபட்டி
செயலாளர்



**கவிதா கருப்பன் செட்டி**
ஆத்தங்குடி
துணை செயலாளர்



**சுவாமிநாதன் இராகவன்**
அரிமளம்
பொருளாளர்

# துபாய் நகரத்தார் சங்கம்

## செயற்குழு உறுப்பினர்கள்






| முருகப்பன் தண்ணீர்மலை | மகாலிங்கம் வள்ளியப்பன் | வள்ளியப்பன் காசி விஸ்வநாதன் | இராமநாதன் சுப்ரமணியன் |
|---|---|---|---|
| குழிபிறை | தேவகோட்டை | தேவகோட்டை | தேனிபட்டி |





| வினோதா பாலசுப்பிரமணியம் | சிந்து சோமசுந்தரம் | உமா மகேஷ்வரி |
|---|---|---|
| ஆத்தங்குடி | கல்லுப்பட்டி | காரைக்குடி |

கல்வி மற்றும் திருமண உதவி தொகை பெற விரும்புவோர்கள் நிதி உதவி விண்ணப்பங்களை கைப்பட எழுதி போதிய ஆவணங்களை இணைத்து தபால் மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


**துபாய் நகரத்தார் சங்கம் நகர விடுதி**

செஞ்சை பெருமாள் கோவில் தெற்கு, நா.புதூர்,

காரைக்குடி – 630 001. சிவகங்கை மாவட்டம்

போன் : 04565 250033/94424 07733

Email id: info.dunagsviduthi@gmail.com

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani







**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**

#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

## 5

# சாதனை படைத்திடுக!
# சரித்திரத்தில் நிலைத்திடுக!

உலகம் இன்றைக்கு அறிவியல் வளர்ச்சியால் அதிவேகமாக பலதுறைகளில் மாற்றங்களைக் கண்டு வருகிறது.

குறிப்பாக பத்திரிக்கைத் துறையில் பழங்காலத்து முறை முற்றிலும் மாறுபட்டு அவைகள் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டு அச்சிதழாக இல்லாமல் மின்னிதழாக வெளிவருகின்றன.

மின்னிதழின் உண்மை நிலையை அறிந்து கொண்ட, திருமதி. உமாராணி சொக்கலிங்கம் அவர்களும், திரு. சொக்கலிங்கம் இராமநாதன் அவர்களும், மிகுந்த நம்பிக்கையோடும் துணிச்சலோடும்,"நாம் நகரத்தார்"இதழை "மாத மின்னிதழாக" வெளியிட்டு, வாசகர்களின் வரவேற்பைப் பெற்று நான்கு ஆண்டுகள் நிறைவு செய்துள்ளனர்.

நாம் நகரத்தார்" மின் இதழுக்கு முதலில் நான் வாசகன். அதன் பின்னால் தான் நான் அதற்கு ஒரு எழுத்தாளன்.

வண்ணப்பக்கங்களின் வடிவு அமைப்பு என்னை வாசகனாக இல்லையில்லை ஒரு பாமரனாக வெகுவாக ஈர்த்தது.

நகரத்தார் சமூகம் சார்ந்த அற்புதமான செய்திகளை ஆதாரங்களோடு அறிஞர் பெருமக்களை எழுத வைத்து பதிப்பித்த கட்டுரைகள் எழுத்தாளன் என்ற நிலையில் என்னைக் கவர்ந்தது.

ஆன்மீகம் என்ற பெயரில் அனைவருக்கும் தெரிந்த செய்திகளைத் தெளித்து விட்டுச்செல்லாமல், வரலாற்று சிறப்புமிக்க பழங்கால கோவில்களைப்பற்றிய தகவல்களை வெளியிட்டு வரும் நேர்த்தி எனக்கு மிகவும் பிடித்தது.

கண்ணனூர் அருள்மிகு பாலசுப்பிரமணியரின் கற்றளிக் கோவிலை, இன்றைக்கு அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் கட்டுரையை வெளியிட்டு வருவது போற்றுதலுக்குரியது.

மொத்தத்தில் "நாம் நகரத்தார்" மின்னிதழ் மூலம்

நகரத்தார் சமூகத்தின் பெருமையை உலகறியச் செய்துவரும் வெளியீட்டாளர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

வளர்க "நாம் நகரத்தார்" மின்னிதழ் உலகில்!
வரலாறு படைத்திடுக பத்திரிக்கை உலகில்!

அன்புநட்புடன்,

கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.



# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி –19



– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!



## உடுத்து

"அனா ருனா வீட்டுக்குப் போற. பெரிய மனுசகளெல்லாம் வருவாக. நல்ல துணியா உடுத்திட்டுப் போடா" என்ற ஆத்தாக்களின் கரிசனமான வார்த்தைகளில் உடுத்துதல் என்பது ஆடையை அணிதல் என்ற பொருளைத் தருகிறது.

வெற்றிகரமான 5ஆம் ஆண்டில்

## உண்டைக் கட்டி

"இன்னக்கி கோயிலுக்குப் போயிருந்தேன். உண்டக்கட்டி குடுத்தாக. அவ்வளவு ருசியா இருந்துச்சு" என்பதில் உண்டக்கட்டி என்பதற்கு கோயிலில் தரும் படையல் உணவு எனப் பொருள் கொள்ளலாம்.



உருண்டை என்பதே உண்டை என மருவி வந்துள்ளது. உருண்டை வடிவிலான கோயில் பிரசாதம் உண்டைக்கட்டி என்றழைக்கப்படுகிறது.

## உண்ணாமலை



நகரத்தார் இனப் பெண்களில் பலருக்கு இப்பெயர் இருப்பதைக் கவனித்திருக்கலாம். உண்ணாமுலை என்பதே உண்ணாமலை எனத் திரிந்துள்ளது. திருவண்ணாமலையில் அருளும் அம்பிகையின் பெயர் உண்ணாமுலை என்பது.

**உத்துப் பார்த்தல்**

"என்ன அப்பத்தா ஊசியையும் நூலையும் கையில வச்சிக்கிட்டு ஊசியையே உத்துப் பாத்துக்கிட்டு இருக்க. கண்ணு மட்டுப்பலையா?"என்று கேட்கும் பேரனின் பேச்சில், உத்துப் பார்த்தல் என்பது உற்றுப் பார்த்தல், கவனமாகப் பார்த்தல் என்று பொருள்படும்.

**உதப்புதல்**

"வாய்க்குள்ள என்னத்த வச்சிருக்க. இப்புடி உதப்பிக்கிட்டே இருக்க?" இங்கு உதப்புதல் என்பது வாயில் இட்ட உணவை மென்று விழுங்கவும் செய்யாது, வெளியே துப்பவும் செய்யாது வைத்திருப்பதைக் குறிக்கிறது. எச்சில் தெறிக்கப் பேசுவது என்ற பொருளிலும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

**உத்திரம்**



"ஏண்டா! கணேசா, இத்தனை உத்தரம் வச்சு வீடு கட்டியிருக்க. ஆனா, ஒரு ஊஞ்சல மாட்ட ரெண்டு வளையத்தப் போடாம விட்டுட்டியே?" என்று நம்மவர்கள் சொல்வதில் உத்தரம் என்பது தூண்களால் தாங்கப்படும் மரக்கட்டைகளைக் குறிக்கும். ஆனால், அகராதிகள் உத்தரம் என்பதற்கு தூண் என்று பொருள் தருகின்றன.

வெற்றிகரமான 5ஆம் ஆண்டில்

## உதவாக்கரை



"என்ன அப்பத்தா ஊசியையும் நூலையும் கையில வச்சிக்கிட்டு ஊசியையே உத்துப் பாத்துக்கிட்டு இருக்க. கண்ணு மட்டுப்பலையா?"என்று கேட்கும் பேரனின் பேச்சில், உத்துப் பார்த்தல் என்பது உற்றுப் பார்த்தல், கவனமாகப் பார்த்தல் என்று பொருள்படும்.

## உதறு

" துண்ட உதறித்துட்டு துவட்டு. பூச்சி எதாவது இருக்கப் போகுது". " கை காலெல்லாம் என்னடா இப்படி உதறுது. குளிர் காச்சல் வந்திடுச்சா? " என்று சொல்வதில் உதறுதல் என்ற சொல் இருவகையாகப் பொருள் தருகிறது. முதல் உதறு விரைந்து அசைத்தல் என்ற பொருளையும். இரண்டாம் உதறு நடுங்குதல் என்ற பொருளையும் தருகிறது.

## உப்பு மூட்டை



"ஆத்தா! சாலா ஐயா முதுகுல ஏறிக்க. உப்பு மூட்டை தூக்குறேன்" என்று பேத்தியுடன் விளையாடும் ஐயாக்கள் சொல்வதைக் கேட்டிருக்கலாம். நம்மவர்கள் உப்புமூட்டை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் பொதுவாக உப்புக் கட்டுதல் என்றே அழைத்துள்ளனர்.

உப்பு + கட்டுதல் – உப்பு மூட்டையை முதுகில் சுமந்தவாறு பண்டமாற்று வாணிகம் செய்த பழங்காலச் சூழலில் தோன்றிய சொல்லாட்சி. ஆதலால், குழந்தையை முதுகில் சுமந்து விளையாடும் விளையாட்டை இச்சொல் குறித்தது.

### உப்புக்கண்டம்



"இந்த வருசம் சித்திரையில உப்புக்கண்டம் போடனும். நம்ம கறிக்கடை சேதுக்கிட்ட இப்பவே சொல்லிவச்சிரு. அவன் தோதான கறியாத் தருவான்" என்பதில் உப்புக் கண்டம் என்பது உப்பூட்டிக் காயவைத்த இறைச்சித் துண்டைக் குறிக்கிறது.

கண்டம் என்றால், துண்டு, பாகம், பிரிவு. எனப் பொருள் கொள்ளலாம். கண்டம் என்பதற்குச் சதைப்பாகம் என்ற பொருளும் உண்டு.

– தொடந்து பேசுவோம்



# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

5

## 'நாம் நகரத்தார்' இனிய பலா... நடத்தட்டும் வெற்றி உலா!

நகரத்தார் குடும்பங்களில் ஒரு அங்கமாகச் செயல்படும் பங்காளியே 'நாம் நகரத்தார்' மின்னிதழ்.

இதழின் வடிவமைப்பு கைகளில் தவழும் மயிலிறகுபோலப் புரள்வது வியப்பு. எழுத்துக்களின் அளவமைப்பு ஏற்படுத்தும் பிரமிப்பு. மஞ்சாளி விதைபோல ஒவ்வொரு எழுத்தும் தனித்தனியாக மிளிர்வதால் கண்களை உறுத்துவதில்லை, இதனால் கட்டுரைகளும் கதைகளும் மனதைத் தாண்டிச் செல்வதில்லை. இதழ் தாங்கி வரும் தகவல்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முந்திக்கொண்டு முக்கியமாகவும் நன்மை பயப்பதாகவும் இருப்பது சிறப்பு.

அட்டைப்படந்தொடங்கி அனைத்துப் பக்கங்களிலும் புதுமை என்பது உண்மை. ஆன்மிகமும் அறிவியலும் அகந்திறக்கும் கண்களாம் அதனை ஒவ்வொரு இதழும் ஏந்திவந்து நம்மைச் சேர்க்கும் விதம் மேன்மை.

பலாவுக்குள் ஒளிந்திருந்து சுவையூட்டும் பல நூறு சுளைபோல, ஒரு இதழுக்குள் பல தகவல்களை நிறைத்து இனிப்பூட்டி வருகின்றது ஒவ்வொரு திங்களும் 'நாம் நகரத்தார்'. அகவை பேதமின்றி அனைவருக்கும் செய்தி உண்டு. ஆத்தா அப்பச்சிக்கும் அண்ணன் தம்பிகளுக்கும் ஆச்சி தங்கைகளுக்கும் அன்பான மழலைகளுக்கும் வேண்டும் படி கொள்ள விதவிதமாய் நற்செய்திகள், என்றே தொடரும் 'நாம் நகரத்தார்' பெருமைகள்.

வாசிப்பை வளமாக்க 'நாம் நகரத்தார்' எடுக்கும் முயற்சிகளை வரவேற்க வேண்டும் புன்னகைத்து. வாழ்த்தவேண்டும் நாம் நகரத்தார்கள் இணைந்து.

ஐந்தாண்டு மழலை 'நாம் நகரத்தார்', ஆறுமுகன் துணையோடு,
ஆண்டுகள் பல கடந்து, அண்டத்தில் தனியிடம் கண்டு
ஆளட்டும் நகரத்தார் மனங்களைக் கொண்டு என்று
மனம் நிறைய வாழ்த்துகின்றேன்.



வாழ்க வளத்துடன்
மீ.மணிகண்டன்

வெற்றிகரமான
5ஆம்
ஆண்டில்




# பிள்ளையார் நோன்பு பலகாரங்கள்

நகரத்தார்களுக்கே உரியமுக்கிய விழாக்களில் மிகுந்த தொன்மையும், பெருமையும் உடைய விழாவாக கடைப்பிடிக்கப்படும் பிள்ளையார் நோன்பு இந்த மாதம் 25.12.2025 வியாழக்கிழமை அன்று வருகிறது. தமிழ்நாட்டில் மட்டுமில்லாமல், அனைத்து நாடுகளிலும் வசிக்கும் நகரத்தார் பெருமக்களால் இந்த "பிள்ளையார் நோன்பு" தவறாமல் கடைப்பிடிக்கப் படுகிறது. பண்டிகை என்றால் பலகாரங்கள் இல்லாமலா? . இறைவழிபாட்டில் இனிப்பு பலகாரங்கள் முக்கிய இடத்தை வகுக்கின்றன. அந்த வகையில் பிள்ளையார் நோன்பில் கருப்பட்டி பணியாரம், கந்தரப்பம், திரட்டுப்பால் ஆகியன முதன்மை பெறுகின்றன. செட்டிநாட்டு சமையல் என்றாலே அதற்கென்று தனிமுத்திரை தனி ருசி ! ஆச்சிகள் அனைவருக்கும் நம் பாரம்பரிய பலகாரங்கள் அத்துப்படி. இருந்தாலும் இன்றைய தலைமுறையினரும் நம் பாரம்பரிய பலகாரங்கள் பற்றி அறிவது தொடரும் நம் பாரம்பரிய பரிணாமத்திற்கு உதவும்.

சுவீட் எடு கொண்டாடு.. ஆம் இந்த இதழில் பிள்ளையார் நோன்பு இனிப்பு பலகாரங்கள் செய்முறை பற்றி பார்ப்போம்.



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram



வெற்றிகரமான 5 ஆம் ஆண்டில்

## கருப்பட்டி பணியாரம் :



பிள்ளையார் நோன்பில் முக்கியமாக இடம் பெறுவது கருப்பட்டி பணியாரம். கருப்பட்டி பணியாரம் செய்வது எப்படி என்று முதலில் பார்ப்போம்.

## தேவையான பொருட்கள் :

பச்சரிசி – 1 கிலோகிராம்
கருப்பட்டி – ½ கிலோகிராம்
ஏலக்காய் – 5 எண்ணம்
எண்ணெய் – பொரித்தெடுக்கத் தேவையான அளவு

## செய்முறை :

முதலில் பச்சரிசியை முப்பது நிமிடம் நேரம் ஊற வைக்கவும். பின் தண்ணீரை வடித்து காய்ந்த துணியில் அரிசியை பரப்பி உலர விடவும். இடிக்கும் பதத்தில் அரிசியை எடுத்து மிசினில் கொடுத்து நைசாக இடித்துக் கொள்ளவும். பின் சலிப்பானில் இட்டு சலித்துக் கொள்ளவும்.

கருப்பட்டியை ஒன்றிரண்டாத் தட்டிக் கொள்ளவும். பாத்திரத்தில் ஒன்றிரண்டாக தட்டிய கருப்பட்டியைப் போட்டு சிறிதளவு தண்ணீர் ஊற்றி அடுப்பில் சிம்மில் வைக்கவும். கருப்பட்டி முழுவதும் கரைந்து கரைசலானவுடன் உடன் அடுப்பிலிருந்து இறக்கி விடவும். பின் அதனை வடிகட்டிக் கொள்ளவும்.

கருப்பட்டிக் கரைசலை சிறிது சிறிதாக இடித்து சலித்த அரிசி மாவில் சேர்த்துக் கிளறவும். தேவையான அளவு தண்ணீர் சேர்த்து மாவை இட்லி மாவுப் பதத்தில் தயார் செய்யவும். ஏலக்காயை ஒன்றிரண்டாக தட்டி மாவுடன் சேர்க்கவும். இதுவே பணியாரம் சுடுவதற்கு ஏற்ற பதமாகும்.

வாணலியை அடுப்பில் வைத்து பொரித்தெடுக்கத் தேவையான அளவு எண்ணெய் ஊற்றவும். எண்ணெய் காய்ந்ததும் ஒரு குழிக்கரண்டி மாவினை எடுத்து ஊற்றவும். ஒரு புறம் வெந்ததும் திருப்பிப் போட்டவும். பிரவுன் கலர் வந்ததும் எடுத்து விடவும். சுவையான கருப்பட்டி பணியாரம் தயார். இதை காற்றுப்புகாத டப்பாவில் அடைத்துக் கொள்ளவும். இதனை இரு வாரங்கள் வரை உபயோகிக்கலாம்.

**கந்தரப்பம் :**



பிள்ளையார் நோன்பு பலகாரங்களில் அடுத்து இடம் பெறுவது கந்தரப்பம். செட்டிநாட்டு பலகார வகைகளில் நிறையப்பேர் விரும்புவதும், முக்கியமானதும் செட்டி மகன் செல்லப்பிள்ளை கந்தனுக்கு பிடித்தமானதுமான கந்தரப்பம். வாருங்கள் இதன் செய்முறையை காண்போம் .

**தேவையானவை:**

500 கிராம் பச்சரிசி (2 ½ கப்)
100 கிராம் உளுத்தம் பருப்பு (½ கப்)
400 கிராம் வெல்லம் (2 கப்)
தேங்காய் பூ 2 மேஜைக்கரண்டி
1 தேக்கரண்டி வெந்தயம்
ஏலக்காய் 10.

அரிசி, உளுந்தம் பருப்பு,வெந்தயம் ஆகியவற்றை ஒன்றாக ஊற வைத்து பிறகு தண்ணீர்சிறிதளவு ஊற்றி அரைக்க வேண்டும். பாதி அரைத்ததும் தட்டி வைத்துள்ள வெல்லத்தை அத்துடன் சேர்த்து நன்கு மிருதுவாக அரைபட்டபின் அத்துடன் தேங்காய்பூ சேர்த்து மேலும் 2–3 நிமிடங்கள் அரைத்து பின் அரைத்த மாவை பாத்திரத்தில் எடுத்து அத்துடன் ஏலக்காயை பொடி செய்து மாவில் போட்டு நன்கு கலந்து, அடியில் தட்டையான(flat bottom)வாணலியை அரிசி,உளுந்தம் பருப்பு, வெந்தயம் ஆகியவற்றை ஒன்றாக ஊற வைத்து பிறகு தண்ணீர் சிறிதளவு ஊற்றி அரைக்க வேண்டும். .பாதி அரைத்ததும் தட்டி வைத்துள்ள வெல்லத்தை அத்துடன் சேர்த்து நன்கு மிருதுவாக அரைபட்ட பின் அத்துடன் தேங்காய்பூ சேர்த்து மேலும் 2 – 3 நிமிடங்கள் அரைத்து பின் அரைத்த மாவை பாத்திரத்தில் எடுத்து அத்துடன் ஏலக்காயை பொடி செய்து மாவில் போட்டு நன்கு கலந்து, அடியில் தட்டையான(flat bottom) வாணலியை

வெற்றிகரமான 5 ஆம் ஆண்டில்

அடுப்பில் வைத்து எண்ணையை ஊற்றி காய்ந்ததும் அரைத்து வைத்துள்ள மாவை வட்டமான கரண்டியில் எடுத்து எண்ணைக்குள் ஊற்றி அப்பம் மேலெழும்பி வந்ததும், அதை திருப்பி விட்டு வெந்ததும் எடுக்கவும்.

## குறிப்புகள்

1) அரிசி பருப்பு முப்பது அல்லது நாற்பது நிமிடங்கள் ஊறினால் போதுமானது.

2) வெல்லத்தை முன் கூட்டியே தட்டி பொடியாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.)

3) மாவு அரைக்கும்போது தண்ணீரை சிறிது சிறிதாக ஊற்றி அரைக்க வேண்டும் தண்ணீர் கூடி விட்டால் வெல்லம் போட்டதும் இன்னும் அதிகம் இளகி மாவு தண்ணியாகி விடும்.

4) எண்ணை அதிகம் சூடாக இருந்தால் பணியாரம்(அப்பம்)சீக்கிரம் வெந்து உள்ளே வேகாமல் மாவாக இருக்கும்.அதே சமயம் சூடு குறைந்தாலும் எண்ணையை குடித்து விடும் ஆதலால் சரியான அளவில் நெருப்பை குறைத்து வைத்து பணியாரம் சுட வேண்டும். இது எல்லாவித எண்ணை பலகாரத்திற்கும் பொருந்தும்.

5) மாவை அரைத்தவுடனும் கந்தரப்பம் சுடலாம்.சிறிது புளிக்க வைத்தும் சுடலாம் (ருசி குழிப்பணியாரம் போல் இருக்கும்).

6) தேங்காய்ப்பூவை (சேர்த்து)அரைக்காமல் மாவில் நேரடியாக போட்டு கலந்தும்சுடலாம்

7) அதிக இனிப்பு விரும்பாதவர்கள் வெல்ல அளவை குறைத்து கொள்ளலாம்.

வெற்றிகரமான 5 ஆம் ஆண்டில்

## திரட்டுப்பால்



அடுத்து பிள்ளையார் நோன்பில் இடம்பெறும் இனிப்பு வகை திரட்டுப்பால். இதன் செய்முறை

### தேவையான பொருட்கள்:

பால்–1 லிட்டர்

கருப்பட்டி அல்லது வெல்லம் பொடித்து 1 மேஜைக்கரண்டி

### செய்முறை :

1. பாலை காய்ச்சி பொங்கி வரும்போது மிதமான தீயில் சுண்டக்காய்ச்சவும்.
2. நான்கில் ஒரு பங்காக சுண்டியதும் பொடித்த வெல்லம் அல்லது கருப்பட்டி சேர்த்து பால்கோவா பதம் வரும் வரை கிண்டிக்கொண்டே இருக்கவும்.
3. நன்றாக திரண்டு வந்ததும் கிண்ணத்தில் நெய்த்தடவி அதில் மாற்றி பயன்படுத்தவும் .திரட்டுப்பால் ரெடி

கட்டுரையாக்கம்:

உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.



நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்
5

## 'நாம் நகரத்தார்'

ஆம்! நாம் நகரத்தார் என்பதை நம் இனத்தவர் ஒவ்வொருவரும் ஆழமாக உணர வேண்டிய அர்ப்பணிப்பு நிறைந்த காலச்சூழலில் நாம் வாழ்ந்து வருகிறோம். உரிய காலத்தில், உரிய பெயருடன் அழகிய வடிவில் மாதந்தோறும் வெளிவரும் இந்த இதழ், உலகின் பல நாடுகளில் வாழும் நகரத்தாரை ஒரே குடும்பமாக இணைக்கும் உறுதியான சங்கிலியாகத் திகழ்கிறது.

பல்சுவை இதழாக வெளிவரும் இதன் ஒவ்வொரு இதழிலும், எல்லா வயதினருக்கும் ஏற்ற கட்டுரைகள், சிந்தனையைத் தூண்டும் செய்திகள், பொருளடக்கத்துக்கேற்ற புகைப்படங்களுடன் உயிரோட்டமாக அமைவது இதன் தனிச்சிறப்பு.

இவ்விதழ் நகரத்தாரிடையே எனக்கென ஓர் அன்பு முகவரியை, ஒரு எழுத்தாளர் அடையாளத்தை வழங்கிய களமாக அமைந்தது என்று சொன்னாலும் அது மிகையாகாது.

நாம் நகரத்தார் – இந்த இதழோடும், அதன் வழியாக நகரத்தார் இனத்தின் ஒற்றுமையும் ஒளிர்ந்து, ஒவ்வொரு இல்லத்திலும் நல்ல சிந்தனை, நல்ல செயல்களை விதைத்து தழைக்க வேண்டும் எனக் கண்ணனூர் முருகனருளை பணிவுடன் வேண்டுகிறேன்.

என்றும் அன்புடன்



கு.அன்பு மெய்யப்பன்
பேராசிரியர்
இராமசாமி தமிழ்க்கல்லூரி
காரைக்குடி

# இழையின் தனித்துவம் அதுவே மகத்துவம்

வணிகம் செய்ய இனிதாய்க் கப்பலிலே பயணம்
செட்டியார்கள் செல்வந்தர்களாகத் திகழ்ந்த அந்தக் காலம்

சுழன்றிடும் புயலினிலே மாட்டிக் கொண்டார் நடுவிலே
காத்திட வந்தார் பிள்ளையாரும் இனிய உருவிலே

இருபத்தோராம் நாளினிலே கரை சேர்ந்தார் களிப்புடன்
நேர்த்திக் கடனைக் கொடுத்திட்டார் மனம் மகிழ்வுடன்

அந்த நாளே பிள்ளையார் நோன்பாய் ஆனது
இருபத்தோரு நூல் தொடுத்து இழை எடுத்தது

கருப்பட்டி மாவினிலே விநாயகர் உருவமாம்
புத்தம் புது வேட்டியிலே திரி திகழுமாம்

வணங்கி விட்டே அளித்திடுவார் வீட்டில் மூத்தவர்
பணிவுடனே பெற்றுச் சிறந்திடுவார் என்றும் இளையவர்

நித்தம் கொண்டாடி மகிழ வேண்டும் நாமுமே
இழை எடுத்துக் கொள்ள வேண்டும் தவறாமலே



கவிச்சுடர்
தஞ்சை பழ வள்ளியப்பன்
மதுரை



# நம்பிக்கை தரும் தும்பிக்கையான் நோன்பு ..!!

( பிள்ளையார் நோன்பின் கதை )

–இராம.நா. இராமநாதன் – ஆ.தெக்கூர்

நகரத்தார்களுக்கே உரிய முக்கிய விழாக்களில் மிகுந்த தொன்மையும், பெருமையும் உடைய விழாவாக கடைபிடிக்கப்படுவது பிள்ளையார் நோன்பு ஆகும்.

சமூகம் ஒன்றின் வழியில் தலைமுறைகள் பல தாண்டி தொடர்ச்சியாய் வரும் பண்பாட்டு நடைமுறை மரபு ஆகும். மூத்த தமிழ் குடிகளில் நகரத்தார் எனப்படும் நாட்டுக்கோட்டை செட்டியார் தொன்மையான கலாச்சாரமும் பாரம்பரியமும் பெற்றவர்கள். தம் மரபுகளை தொன்றுதொட்டு கடைபிடித்து வரும் பாரம்பரிய சிறப்புடையவர்கள் நகரத்தார்கள் .



பூம்புகாரில் தங்களது மூதாதையர்கள் செய்து வந்த வழிபாட்டை அப்படியே இன்றளவும் நகரத்தார்கள் கடைப்பிடிகின்றனர். மன்னர் பின்னோராகிய நகரத்தார் சமூகத்தினர் அனைவரும் தொன்று தொட்டு வணங்கி வரும் விநாயகப் பெருமானை " மரகதப்பிள்ளையார் " என்று வரலாற்றுச் சான்றுகளும், கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன.

அந்த மரகதப் பிள்ளையாரை கொண்டாடும் வகையில் அமைந்த விழாவானது " பிள்ளையார் நோன்பு " ஆகும்.

ஒரு விழா என்பது ஏன் கொண்டாப்படுகிறது, அதன் வரலாற்றுத் தொன்மை இவைகளை அறியும் போது அந்த விழா இன்னும் சிறப்பாகவும் வரும் சந்ததியினர் வரலாறு அறிந்து அந்த விழாவில் முழு ஈடுபாடு கொள்ளும் போது அந்த விழா முழுமையும் பெறும்.

பிள்ளையார் நோன்பின் வரலாறு , பிள்ளையார் நோன்பு எடுக்கும் முறை ஆகியவற்றை இந்த கட்டுரையில் காணலாம்.

கார்த்திகை மாதம் சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் கூடிய நாளில் பிள்ளையார் நோன்பு கடைப்பிடிக்கப்படுகிறது. பிள்ளையார் நோன்பு கார்த்திகை தீபத்துக்கு அடுத்த நாள் ரோகிணி நட்சத்திரத்தில் தொடங்கி, சதய நட்சத்திரத்தன்று நிறைவு பெறும். 'சட்டி ( சஷ்டி ) தொட்டுச் சதயம் விட்டு ' என்ற பழமொழி இந்த உண்மையை தெளிவு படுத்தும்.

பிள்ளையார் நோன்பினை பற்றிய வாய்மொழி வரலாற்று கதையினை பற்றிவிரிவாக பார்ப்போம்:

முற்காலத்தில் நகரத்தார் சிலர், வாணிபத்தின் பொருட்டு காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து கடற்பயணம் மேற்கொண்டனர். வழியில் அவர்கள் சென்ற கப்பல் புயலில் சிக்கிக் கொண்டது. அன்று கார்த்திகை தீபத் திருநாள். புயலில் இருந்து தங்களைக் காப்பாற்றும்படி தங்கள் கடவுளான மரகதப் பிள்ளையாரை வேண்டிக்கொண்டார்கள். கப்பல் திசை மாறிச் சென்றுவிட்டபோதும், கடலில் மூழ்கிவிடவில்லை.

கப்பலில் தாங்கள் உயிருடன் இருந்த ஒவ்வொரு நாளும் விநாயகர் தங்களுக்குத் தந்த பரிசு என்று போற்றி, அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் நாட்களை கணக்கிடுவதற்காக தங்கள் வேஷ்டிகளில் இருந்து ஒரு நூலை எடுத்து பத்திரப்படுத்தினர் 21–வது நாள் அவர்கள் ஒரு தீவில் கரை சேர்ந்தனர். அந்த நாள் கார்த்திகை மாதம் சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் அமைந்த நாள்.



தாங்கள் உணவிற்காக பயணத்தில் கொண்டு வந்த அரிசி மாவு, நெய், வெல்லம், முதலியவற்றை கலந்து பிள்ளையார் போல் பிடித்து வைத்து 21 வேஷ்டி நூல்களையும் சேர்த்து திரி போல் செய்து அந்த மாவு பிள்ளையரில் ஏற்றினர். அத்தீவில் கிடைத்த ஆவாரம் பூவைக் கொண்டு பிள்ளையாருக்கு அர்ச்சித்தனர்.

சில நாள்களில் வானிலை சரியானதும் அவர்கள் ஊருக்குத் திரும்பி நடந்தவற்றை தங்கள் மக்களிடம் கூறினர். அப்போது முதல் வருடம்தோறும் பிள்ளையார் நோன்பை கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படுகிறது.

தங்கள் மக்களில் பெரும்பாலோரைக் காப்பாற்றிய மரகத பிள்ளையாரை ஒவ்வொரு வருடமும் கார்த்திகை தீபத் திருநாளில் இருந்து 21 ஆம் நாள், சஷ்டியும் சதயமும் கூடும் நாளில் ஆவாரம் பூவும் அரிசி மாவு பிள்ளையாரும் புத்தம் புது வேஷ்டியின் நூலில் செய்யப்பட்ட திரியைக் கொண்டு விளக்காக ஏற்றி தங்களையும்

தங்கள் குடும்பத்தாரையும் காக்குமாறு பிள்ளையாரை வேண்டுகின்றனர். பின்னர் அந்த மாவு பிள்ளையாரை உண்டு மகிழ்வர்.

## பிள்ளையார் நோன்பின் பின்னணியில் மற்றுமொரு கதையும் உண்டு.

அந்நாளில் புகார் நகரத்தில் தெய்வானை என்ற பெண் ஒருத்தி இருந்தாள். அவளுடைய தாயார் காலமாகி விடவே, தனது மகளின் நலன் கருதி அவளது தந்தை மறுமணம் செய்துகொண்டார். தொடக்கத்தில் குணவதியாக நடந்த சித்தியாக வந்தவள் புத்தி ஓராண்டுக்குள் மாறியது. அவள் தெய்வானையிடத்து மாற்றாந்தாய் மனப்பான்மை யுடன் நடந்துகொண்டாள்.



தெய்வானையை எப்படியாவது வீட்டை விட்டு வெளியேற்றிவிட வேண்டும் என்று எண்ணி எல்லா வீட்டு வேலைகளை எல்லாம் செய்யச் சொல்லி துன்புறுத்தினாள். அன்று திருக்கார்த்திகையின் முதல் நாள், குளிக்கச் செல்வதற்கு முன்பாக தன்னுடைய வைரத் தோடைக் கழற்றி வீட்டின் இரண்டாங் கட்டில் உள்ள பட்டசாலையில் ஒரு தூணுக்கு அருகில்வைத்துவிட்டுச் சென்றாள். திரும்பி வந்து பார்த்தபோது வைரத் தோடு வைத்த இடத்தில் இல்லை. தெய்வானைதான் அதைத் திருடியிருக்க வேண்டும் என்று குற்றம் சாட்டினாள்.

தான் செய்யாத தவறுக்காக இப்படி துன்பத்தை அனுபவிப்பதை விட உயிரவிட்டுவிடலாம் என்று எண்ணி வீட்டை விட்டு வெளியில் வெளியேறி வழியில் உள்ள மரகத பிள்ளையார் கோயிலில் தஞ்சம் புகுந்து பிள்ளையாரிடம் தனது குறைகளை அழுது கொட்டி முறையிட்டாள். பின் இங்கு விநாயகர் சன்னதியில் உண்ணா நோன்பிருந்து தன் உயிரை விட முடிவெடுத்தாள். கோயில் குருக்கள் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதன் பேரில் பிள்ளையாருக்குப் படைத்த தேன், திணை, நெய் இவற்றை மட்டும் சிறிது எடுத்துக் கொண்டு நோன்பிருந்தாள்.



21–வது நாள் மாலை பிள்ளையார் சந்நிதியிலிருந்து எறும்புகள் சாரை சாரையாக வெளியில் வந்தன. அவள் உள்ளுணர்வு அந்த எறும்புகளைப் பின்தொடரச் சொல்லவே எறும்புகளைப் பின் தொடர்ந்து சென்றாள். எறும்புகள் இரண்டாம் கட்டுக்குள் தெய்வானையின் சித்தி நகைகள் கழற்றி வைத் தூண் அருகே துளையிட்டு உள்ளே சென்றது.

இதை கண்ட செட்டியார் அங்கு வேலையாளை விட்டு தோண்டச் சொன்னபோது அங்கு காணாமல் போன வைரத் தோடு இருந்தது. உண்மை நிலையைக்கண்ட சித்தியும் தன் தவற்றை உணர்ந்து தெய்வானையிடம் மன்னிப்பு கேட்டாள்.

இதை கண்ட மக்களும் சாதாரண ஒரு பெண் இப்படி நோன்பிருந்து, வழிபட்டு இத்தகைய பலனை பெற்றதை பார்த்து அவர்களும் தங்கள் இல்லங்களில் இந்த நோன்பை அனுசரித்து வழிபட்டனர். இப்படி அவர்கள் வழிபட அவர்களுக்கும் தாங்கள் எண்ணியது ஈடேறி குடும்ப ஒற்றுமை மேலோங்கியது. தெய்வானை விரதம் அனுசரித்த அந்த 21 நாள்கள்தான் பின்னால் பிள்ளையார் நோன்பாக மாறியதாகவும் கூறுவதுண்டு.

இதை இனி இந்த நோன்பு அனுஷ்டிக்கப்படும் முறையை பாப்போம்.

நோன்பு நாள் :

பல்வேறு ஆண்டுகளாக நகரத்தார்களின் மிகுந்த நம்பிக்கைக்குரிய நோன்பாக கடைபிடிக்கப்பட்டு வரும் பிள்ளையார் நோன்பு, திருக்கார்த்திகையில் இருந்து 21ஆம் நாள் கொண்டாடப் படுவது ஆகும். சஷ்டித்திதியும் சதயநட்சத்திரமும் கூடிவரும் நாளில் இந்த நோன்பு கொண்டாப்படுகிறது. இந்த நோன்பானது மாலையில் அனுஷ்டிக்கப்படும் நோன்பு ஆகும்.



பெரிய கார்த்திகை என்றழைக்கப்படும் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் திருவண்ணாமலையில் தீபம் ஏற்றப்படும் மறுநாளிலிருந்து பிள்ளையார் நோன்பு விரதத்தை ஆரம்பிக்கின்றனர். ஒவ்வொரு நாளும் நாள் முழுதும் விரதமிருந்து மாலைப் பொழுது சாய்ந்ததும் பிள்ளையாரை வழிபடுகின்றனர். 21ஆவது நாள் முடியும் போது சதயநட்சத்திரமும் சஷ்டி திதியும் ஒன்றாக வரும் நாள் இரவு பிள்ளையாரை வழிபட்டு நோன்பினைப் பூர்த்தி செய்கின்றனர். 2 1 நாட்களும் வழிபடாவிட்டாலும் கடைசிநாள் அன்று நகரத்தார் அனைவரும் எங்கிருந்தாலும் தவறாது பிள்ளையாரை வழிபட்டு இழையெடுத்துக் கொள்கின்றனர்.

### நோன்பு நடைமுறை :

ஒவ்வொரு நாள் வழிபாட்டின்போதும் புதுத்துண்டு அல்லது புதுவேட்டியிலிருந்து ஒரு சிறிய நூல் இழையை எடுத்து வைக்கின்றனர். இதனை "இழையெடுத்தல்" என்கின்றனர். இவ்வாறு 21 நாட்கள் இழையை எடுத்து வைத்து வழிபடுகின்றனர். இதனால் 21 சிறிய நூலிழைகள் சேர்ந்து விடுகின்றன. இந்த இழைகளை ஒன்றாக்கி, வீட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி பல இழைகளாக நறுக்கி வைத்துக் கொள்கின்றனர். கருவுற்ற பெண்ணிற்கு ஒன்று என்றும் அவளது வயிற்றில் வளரும் பிள்ளைக்கு ஒன்று என்றும் கணக்குப் போட்டுக் கொள்கின்றனர். கைம்பெண்களை மட்டும் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்வதில்லை. எண்ணிக்கையை விடக் கூடுதலாகவோ குறைவாகவோ இழையை நறுக்குவது இல்லை.

வெற்றிகரமான 5ஆம் ஆண்டில்

குடும்பத்தலைவன் (கணவன்), குடும்பத் தலைவி (மனைவி) மற்றும் பிள்ளைகள் அனைவரும் ஒன்றுகூடி வழிபாட்டிற்கான வேலைகளைச் செய்கின்றனர். பிள்ளையார் நோன்பு அன்று, மாலை நேரம் வீட்டினைக் கழுவித் துடைத்துச் சுத்தம் செய்து பூசையறையில் ஒரு பெரிய கோலம் ( தும்பு பிடித்தல்) போடுகின்றனர்.



நகரத்தார் வீடுகளில் எந்த சிறப்பு நிகழ்ச்சியானாலும்( திருமணம், புதுமை, குடிபுகுதல் ) தும்பு பிடிப்பது வழக்கம். தும்பு பிடித்தாலேயே விசேடம் தொடங்கிவிட்டது என்பது கருத்து. வீட்டுக்குரிய தலைவியும் மருமகளும் தும்பு பிடிப்பர். வீட்டில் உள்ள பழமையான ஏடுகளை எடுத்து, அதில் சுற்றியிருக்கும் நூல்கயிற்றைப் பிரித்து, அந்த நூல்கயிற்றை பச்சரிசியை அரைத்து எடுத்த மாவில் முக்கி எடுக்கின்றனர். அந்தக் கயிற்றை (தும்பு) ஆளுக்கு ஒருபக்கமாகப் பிடித்துக் கொண்டு சுவரில் ஒட்டினார் போல் வைத்துக் கொண்டு, ஒரு கையினால் சுண்டி விடுகின்றனர். இவ்வாறாக பூசையறையில் உள்ள சுவரில் இரண்டு இடங்களில் வீடு போன்று மாக்கோலம் போடுகின்றனர். இதனைத் "தும்பு பிடித்தல்" என்று குறிப்பிடுகின்றனர்.



அதன் பின்னர் பூசைக்குத் தேவையான கருப்பட்டி அப்பம், பொரி, அவல், எள்ளுப் பொரி முதலான 21வகை உணவுப் பொருட்களைப் பிள்ளையாருக்குப் படைக்க எடுத்து வைத்துக் கொள்கின்றனர்.



பொங்கலன்று சர்க்கரைப் பொங்கலும், தீபாவளியன்று எண்ணைப் பலகாரங்களும் சிறப்புடையன. பிள்ளையார் நோன்பில் கருப்பட்டியப்பம் சிறப்புடையது. கருப்பட்டியைக் காய்ச்சிப் பாகு எடுத்து அதில் அரிசிமாவையும் சேர்த்து மாவுபிசைந்து அப்பம் சுட்டு வைத்துக் கொள்கின்றனர். இவ்வாறு அப்பம் சுடுவதற்கு எண்ணைய்ச் சட்டியில் மாவை ஊற்றுவதற்கு முன்பு சங்கு ஊதுகின்றனர். பொங்கல் விழாவின் போது, பால் பொங்கி வரும்போது சங்கு ஊதுவோம், பிள்ளையார் நோன்பின்போது சங்கு ஊதிய பின்னரே அப்பம் சுடுகின்றனர்.



ஆவாரம்பூ, கண்ணுப்பிள்ளைப்பூ (கண்ணுப்பூளைப்பூ), நெற்கதிர் இவற்றைச் சேர்த்து ஒரு சிறிய ஆவாரங் குச்சியில் கட்டி இரண்டு பூச்செண்டு தயார் செய்து வைத்துக் கொள்கின்றனர். இந்த ஆவாரம்பூவில் மொத்தம் 21 உறுப்புகள் உள்ளன.

அதைக் குறித்த பாடல் ஒன்று.

"ஏற்ற இறக்கம் இல்லாத ஒக்கப் பிறந்தவர் இருவர்
உடன் பிறந்தவர் மூவர் செக்கச் சிவந்தவர் ஐவர்
செவ்வாழைப்பழம் மூன்று நமரி வாழைப்பழம் நான்கு
பச்சைப் பாம்புக்குட்டி ஒன்று படமெடுத்த பாம்புக்குட்டி மூன்று"

என்று மொத்தம் 21 உறுப்புகள் ஆவாரம்பூவில் உள்ளன.

குடும்பத்தின் மூத்த செட்டியார் தலைப்பாகை கட்டிக் கொண்டு கையில் ஆவாரம்பூச் செண்டைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்குள் வருகிறார். அவரைப் பின்தொடர்ந்து வீட்டில் உள்ள ஆண்களும் வீட்டிற்குள் வருகின்றனர். மூத்த செட்டியார் பூசையறைக்குள் வந்து பிள்ளையார் அருகில் போடப்பட்டிருக்கும் தடுக்கின் மீது அமர்ந்து கொள்கிறார். பிள்ளையார் கிழக்குப் பார்த்தபடி இருக்கிறார்.

பிள்ளையாரை (மேற்குப்) பார்த்தபடி, வயது மூப்பு அடிப்படையில் எல்லா ஆண்களும் வரிசையாகத் தடுக்கில் அமர்ந்து கொள்கின்றனர். பெண்கள் உட்கார்வது இல்லை.



வீட்டில் உள்ளோரின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி கருப்பட்டிப் பாகையும் அரிசிமாவையும் பிசைந்து செய்த மாவினால் கூம்பு வடிவில் பிள்ளையார் பிடித்து வைக்கின்றனர். இந்தப் பிள்ளையார் பூசையைச் செய்யும் தலைவன் (பெண்கள் இதைச் செய்யக்கூடாது) இந்தக் கருப்பட்டிப் பிள்ளையாரின் மீது 21 நூலிழைகள் கொண்ட திரியைப் போட்டு நெய் ஊற்றி நுனி வாழையிலையை விரித்து வைத்து அதன் நுனியில் வெள்ளி அகல் விளக்கு வைத்து மலர்ச்செண்டு சாற்றி, தீபம் ஏற்றி வைக்கின்றனர். பிள்ளையாருக்குப் பொரியினால் அபிஷேகம் செய்கின்றர். அபிஷேகம் செய்யும் போது சங்கு ஊதுகின்றனர். கருப்பட்டி அப்பம், பொரி, முதலான 21வகைப் பலகாரங்களை நிவேதனம் செய்து, தேங்காய் உடைத்துப் பழம் வெற்றிலை பாக்கு வைத்துப் படைத்துத் தீபம் காட்டி வழிபடுகின்றனர்.



வழிபாட்டின் நிறைவாக, இந்த வழிபாட்டினை முன்னின்று செய்யும் குடும்பத் தலைவன், கூம்பு வடிவான பிள்ளையாரின உச்சியில் தீபம் எறிந்து கொண்டிருக்கும் போது சோதியுடன் சுடரோடு பிள்ளையாரை எடுத்து அப்படியே தனது வாயினுள் போட்டுக் கொள்கிறார். அவர் ஒவ்வொரு பிள்ளையாராக எடுத்துக் கொடுக்க, வீட்டில் உள்ளோர் அனைவரும் வரிசையாக வந்து பிள்ளையாரை பெற்றுக் கொண்டு தீபத்துடன் தங்களது வாயில் போட்டுக் கொள்கின்றனர். நிறைவாக, பிள்ளையாருக்கு என ஏற்றிவைக்கப்பட்ட பிள்ளையாரையும் குடும்பத் தலைவன் எடுத்து தனது வாயில் போட்டுக் கொள்கிறார். வழிபாடு நிறைவடையும் போதும் சங்கு ஊதுகின்றனர். இந்த நிகழ்ச்சியை "இழையெடுத்தல்" என்கின்றனர். இவ்வாறு இழை எடுக்கும் போது குடும்பத்தினர் விநாயகர் அகவல் படிக்கின்றனர்.



அதனை தொடர்ந்து மறுநாள் மாலை விளக்கு வைத்தபின் விளக்கேற்றி சங்கு ஊதி பிள்ளையாரின் இருபுறமும் வைத்த ஆவாரம்பூ, கண்ணுப்பில்லை பூங்கொத்தை வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு அருகிலுள்ள பிள்ளையார் கோயிலில் பிள்ளையாருக்கு முன் பூங்கொத்தை தட்டியபின் கோயிலின் ஒட்டுக் கூடத்தின் மீது வீசி விட்டு வீடு திரும்புகின்றனர் நகரத்தார்கள்.



தீபாவளி, கார்த்திகை மற்றும் பொங்கலுக்குச் சீர் செய்யும் வழக்கம் போல பிள்ளையார் நோன்பிற்கும் சீர் செய்யும் வழக்கம் உண்டு. சில குடும்பங்களில் தங்க, வெள்ளி விநாயகரைச் செய்து தங்கள் வீட்டுப் பெண்களுக்கு வழங்கும் வழக்கமும் உண்டாம். அந்தப் பிள்ளையாரின் முதுகில் தங்கள் பெயரினைப் பதித்துத் தருகின்றனர்.

### தற்போது பிள்ளையார் நோன்பு :

முன்னாட்களில் வளவுக்குள் பெரியவர்கள், பங்காளிப் பெரியவர்கள் வீடு வீடாக வந்து எல்லார் வீட்டிலும் இழையெடுத்து கொடுக்கும் வழக்கம் இருந்தது. அந்நாளில் வீடுகளில் உள்ளஅனைவரும் ஒன்றிணைந்து தத்தம் வீடுகளில் எளிமையாக உற்சாகத்துடன் கொண்டாடும் விதம் பற்றி நமது வீட்டு பெரியவர்களிடம் கேட்டு பாருங்கள் அவர்கள் கொண்டாடும் விதத்தை கதை கதையாக சொல்லுவார்கள்.



தீபாவளி, கார்த்திகை மற்றும் பொங்கலுக்குச் சீர் செய்யும் வழக்கம் போல பிள்ளையார் நோன்பிற்கும் சீர் செய்யும் வழக்கம் உண்டு. சில குடும்பங்களில் தங்க, வெள்ளி விநாயகரைச் செய்து தங்கள் வீட்டுப் பெண்களுக்கு வழங்கும் வழக்கமும் உண்டாம். அந்தப் பிள்ளையாரின் முதுகில் தங்கள் பெயரினைப் பதித்துத் தருகின்றனர்.

### தற்போது பிள்ளையார் நோன்பு :

முன்னாட்களில் வளவுக்குள் பெரியவர்கள், பங்காளிப் பெரியவர்கள் வீடு வீடாக வந்து எல்லார் வீட்டிலும் இழையெடுத்து கொடுக்கும் வழக்கம் இருந்தது. அந்நாளில் வீடுகளில் உள்ளஅனைவரும் ஒன்றிணைந்து தத்தம் வீடுகளில் எளிமையாக உற்சாகத்துடன் கொண்டாடும் விதம் பற்றி நமது வீட்டு பெரியவர்களிடம் கேட்டு பாருங்கள் அவர்கள் கொண்டாடும் விதத்தை கதை கதையாக சொல்லுவார்கள்.



தற்சமயம் கால அருமை, கூட்டு வழிபாட்டுப் பெருமை, சிக்கனம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு பிள்ளையார் நோன்பு வழிபாடானது (சுழற்சி முறையில்) ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொருவர் வீடுகளிலும், நகரத்தார் சங்கங்களிலும், திருமண கூடங்களிலும் நடைபெற்று வருகிறது.



நகரத்தார் தம் ஒற்றுமை உணர்வையும், இறைபக்தியையும், சமூக அடையாளத்தையும் வெளிப்படுத்தும் சடங்குகளில் முக்கியமானதும், முதன்மையானதும் " பிள்ளையார் நோன்பு " என்றால் அது மிகையாகாது.

தும்பிக்கையான் மீது நீங்கள் வைக்கும் நம்பிக்கையால் இன்பங்கள் இல்லம் தேடிவரும். நகரத்தார் பிள்ளையார் நோன்பால் வரம், நலம், வாழ்வு யாவும் கொண்டு வளர்ந்தோம் ; வளர்கின்றோம் ; மேலும் செழிப்புறுவோம்.

இந்தக்கட்டுரை பல்வேறு நகரத்தார் தமிழ் ஆளுமைககளின் தரவுகள், மற்றும் நகரத்தார் சமூக இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. காலப்பெட்டகமாக பயன்படும் இக்கட்டுரையில் தொடர்புடைய அனைவருக்கும் நன்றிகள்.



நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்
இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்
Naam Nagarathar Mobile App
இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...
GET IT ON Google Play

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

வலைதளங்கள் கோலோச்சும் இக்காலத்தில் அச்சு ஊடகங்களும் நாளிதழ்களின் புழக்கங்களும் குறைந்து வருகின்றன. அதுவும் நவீன இளைய தலைமுறையினர் கணிணியிலேயே செயலாற்றுவதால் அனைத்தையும் அதன் வழியே தெரிந்து கொள்ளும் நிலையினையும் காண்கிறோம்.

இத்தகைய சூழலில் காலத்தின் ஓட்டத்தை புரிந்து கொண்டு நாம் நகரத்தார் மின்னிதழ் மிகச் சிறப்பான சேவையை அளித்து வருவது பாராட்டுக்குரியது.

பதிப்பாசிரியர் நண்பர் உயர் திரு இராம. சொக்கலிங்கம் அவர்கள் அலுவலக பணியோடு நாம் நகரத்தார் மின்னிதழ் மிக சரியாக வருவதற்கு சிரத்தையுடன் கட்டுரைகளை ஒருங்கிணைத்து செயல்படும் விதமும் அருமை.

மண், பண்பாடு, கலாச்சாரம், மானுடம், பொருளாதாரம், ஆன்மீகம் என அனைத்து தகவல்களையும் ஒரே இதழில் பக்குவமாக எடுத்துரைக்கும் நாம் நகரத்தார் மின்னிதழ் ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை உள்ளம் கனிந்து உவகையுடன் வாழ்த்துகிறேன்!

தொடர்ந்து மென்மேலும் சிறந்த படைப்புகளை வெளிக்கொணர்ந்து உச்சம் தொட முத்தமிழ் இறைவன் அங்காரகனை வேண்டி மகிழ்கிறேன்!

ஜோதிடர் எல்லி
இராமநாதபுரம்



வெற்றிகரமான 5ஆம் ஆண்டில்

பெண் கதவு... ஆண் பூட்டு..! – 19

# பெண்ணின் தியாகம்



நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

தந்தை, தாய் துறந்து... சகோதரன், சகோதரி துறந்து... உற்றார் உறவினர், துறந்து... தான் பிறந்த வீடு, சுற்றம் துறந்து தன்னையே துறந்து... தஞ்சமென வந்தவனை நினைந்து வாழும் பெண்தானே துறவிகளில் துறவி..



பெண்களின் தியாகம் அளப்பறியது. ஆனால் உலகம் ஒரு போதும் ஒப்புக்கொள்ளாது, ஆணாதிக்கமே உலகில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

அன்றிலிருந்து இன்றுவரை அதே நிலைதான், புத்தனாவது சுலபம், புத்தனின் மனைவியாக இருப்பது...?

போதி மரத்தடியில் ஞானம் பெற்ற புத்தர் தன் மனைவி, குழந்தையைப் பார்க்கச் சென்றார்.



மனைவி யசோதரை "என்னை விட்டுப் போனீர்கள், பரவாயில்லை, ஆனால் என்னிடம் சொல்லி விட்டுப் போயிருக்கலாமே... நான் ஒன்றும் உங்களைத் தடுத்திருக்க மாட்டேனே... நீங்கள் என்னை நம்பவில்லை என்ற நினைப்பே என்னை இத்தனைக் காலம் மிகவும் நோகடித்து விட்டது, ஏன் என்னை காயப்படுத்தினீர்கள்" எனக் கேட்டாள்.

"என்னை மன்னித்து விடு... நான் பயந்தது உன்னைக் கண்டு அல்ல, என்னைக் கண்டுதான். உன் முகத்தையோ, மகன் முகத்தையோ பார்த்தால் நான் உறுதி குலைந்து இங்கேயே தங்கி இருந்திருப்பேன்" என புத்தர் பதிலுரைத்தார்.

புத்தரின் வாழ்க்கையைப் போற்றும் எவரும் அவர் மனைவி யசோதரையின் வாழ்க்கையைப் போற்றுவது இல்லை. புத்தர் போனது போல் யசோதரை ஒரு நள்ளிரவில் வெளியேறி இருந்தால் இந்த உலகம், அவளை ஓடுகாலி என்று பழித்தும் இழித்தும் பேசியிருக்கும். புத்தர் போனதால், அவளுக்குக் கிடைத்த பட்டம் 'வாழாவெட்டி..." அழகு மங்கையான அவள் ஆண் வர்க்கத்தின் கழுகுப் பார்வையில் இருந்து விடுபட தன் ஆடையை அலங்கோலமாக்கிக் கொண்டாள். தன் தலையை மொட்டை அடித்துக் கொண்டாள். ஒற்றைப் பிள்ளையின் அப்பா எங்கே? என்ற கேள்விக்குப் பதிலுரைக்க இயலாமல், வாலிபனாக்கி அரச பதவியை ஏற்கச் செய்தாள், எல்லாவற்றையும் துறந்து எத்தொல்லையும் இல்லாமல் துறவியானான் புத்தன். எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு துயரங்களை அனுபவித்தப் படியே துறவியாய் வாழ்ந்தாள் யசோதரை இதில் யார் துறவி புத்தனா? அவன் மனைவி யசோதரையா... பெண்களின் தியாகத்தை ஆணாதிக்க உலகம் என்றுமே ஒப்புக் கொள்வதில்லை.

கண்ணீர் வடிப்பது மட்டும்தான் பெண்கள் வாங்கி வந்த வரமா...? குடும்பத்தில் சரி, வேலை பார்க்குமிடத்திலும் சரி, பல பெண்களின் வாழ்க்கை கண்ணீரிலேயே கரைகிறது. இந்த நிலை மாறாதா எனக் கேட்டால், மாறும்...

அடுத்த ஜென்மத்தில் அவர்கள் ஆண்களாகப் பிறக்க வேண்டும் என்று சொன்னால் பாரதி கண்ட புதுமைப் பெண்கள் அடிக்கத்தான் வருவார்கள். இல்லறத்தைத் துறக்கத் துணிவார்கள்.



ஆனால் இல்லறம் என்பது இருகை ஓசை... ஒரு கை ஓசை எழுப்ப இயலாது... மனவலிமை பெண்ணுக்கு இருந்தாலும், உடல் வலிமை உடைய ஆணின் கையே இல்லறத்தில் சற்று உயர்ந்திருக்கிறது... காலங்கள் மாறினாலும் இல்லறக் காட்சிகள் மாறாது...



நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play

நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

5

# சமூக இதழியல் பணியில் ஐந்தாம் ஆண்டு – வாழ்க..வளர்க..!

நகரத்தார் சமூகத்தில் பல இதழ்கள் வெளிவந்து கொண்டிருந்தாலும், "நாம் நகரத்தார்" மாத இதழ் தனிச்சிறப்புடன் திகழ்கிறது. முதல் இதழிலிருந்து இன்றுவரை தொடர்ந்து வாசிக்கும் ஒருவராக, நான்கு ஆண்டுகளை வெற்றிகரமாக முடித்து, ஐந்தாம் ஆண்டின் புது நடைபாதையில் கால் பதிக்கும் இந்த தருணத்தில், இதழிற்கும் அதன் பதிப்பாசிரியர் திரு இராம. சொக்கலிங்கம் அவர்களுக்கும், இதழாசிரியர் திருமதி. உமாராணிசொக்கலிங்கம் அவர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

பத்திரிகை நடத்துவது ஒரு பெரிய சவால்; அதுவும் முற்றிலும் இலவசமாக இதழை வழங்கி நகரத்தார்களிடையே வாசிப்பு பழக்கத்தையும், நகரத்தார் படைப்பாளர்களையும் வளர்த்து வருகிறார்கள். சேவை மனப்பாங்குடன் இதழை இலவசமாக வழங்கி நடத்துவது கம்பியின் மேல் நடப்பதற்குச் சமம்.

நானும் கடந்த இரண்டரை வருடங்களாக இடைவெளியின்றி "கவிச்சோலை" பகுதியில் தொடர்ந்து கவிதை எழுதி வருகிறேன். முதலில் இதழாசிரியர் திருமதி. உமாராணி சொக்கலிங்கம் அவர்கள் எனது கவிதைகளை முகநூலில் பார்த்து என்னைத் தொடர்பு கொண்டார்கள்;

பின்னர் பதிப்பாசிரியர் திரு இராம. சொக்கலிங்கம் அவர்கள் பேசிச்சில உற்சாகமான வார்த்தைகள் கூறினர். அந்த நாள் முதல் இன்றுவரை, ஒவ்வொரு மாதமும் எழுதி வருகிறேன். எனக்காக இதழில் ஒரு பக்கத்தை ஒதுக்கி, என் எழுத்தை அன்புடன் அரவணைத்த ஆசிரியர்களுக்கு இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நாம் நகரத்தார்" இதழை வருங்காலங்களில் அச்சு இதழாகவும் வாசகர்கள் கைகளில் கொண்டாடக்கூடிய வடிவிலும் காண வேண்டும் என்பதுதான் என் மனமார்ந்த விருப்பம். அதற்காக மாத சந்தா திட்டத்தை அறிமுகப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நகரத்தார் வாசகர்கள் அனைவரும் இந்தத் திட்டத்தில் ஆர்வமுடன் பங்கேற்று, "நாம் நகரத்தார்" இதழின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க வேண்டுமென வேண்டிக் கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இப்படிக்கு,

கவிஞர் M. சோலை
காரைக்குடி.



# பணம் முக்கியமா? நேரம் முக்கியமா?



வெற்றியாளர்கள் பணத்தைவிட,நேரத்தை மிச்சப்படுத்துவதிலேயே அதிக கவனத் தோடு இருக்கிறார்கள். ஏன் தெரியுமா?

ஒரு கல்லூரியில் பேராசிரியர் மாணவர்களிடம் கேள்வி ஒன்றை முன் வைத்தார். 'உங்களிடம் ஒவ்வொரு நாளும் 86,400 ரூபாய் ரொக்கமாகக் கொடுக்கப்படும். இரண்டு நிபந்தனைகளோடு!



ஒன்று, 86,400 ரூபாயையும் முழுமையாக அன்றே செலவு செய்து விட வேண்டும். சேர்த்து வைக்க முடியாது

இரண்டாவது, இந்த ரூபாயை வேறு எங்கும் முதலீடு செய்யக் கூடாது; அடுத்தவர்களு க்கு கடனாகக் கொடுக்கவும் இயலாது.

ஒருவேளை நீங்கள் செலவழிக்காவிட்டால் இந்தப் பணம் அனைத்தும் அன்றே காணாமல் போய்விடும்.

இந்தச் சவாலுக்கு தயாரா? என்று கேட்டார்.

மாணவர்கள் மூளையைக் கசக்கி வழி தேடத் தொடங்கியது ஒருபுறம் இருக்க, உங்க ளால் இந்தச் சவாலை எதிர்கொள்ள முடியுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

'நான் பாரதியார் மாதிரி; எனக்கும். கணக்குக்கும் தூரம் அதிகம்' என்று சொல்லி நீங் கள் தப்பித்துக் கொள்ள முடியாது,

ஏன் என்றால் இந்தச் சவாலை நாள்தோறும் நீங்கள் எதிர் கொண்டு வருகிறீர்கள். ஆம்.



நாள் ஒன்றுக்கு 24 மணி நேரம்: மணி ஒன்றுக்கு 60 நிமிடம், நிமிடம் ஒன்றுக்கு 6 0 வினாடி. இப்போது மூன்றையும் பெருக்கிப் பாருங்கள்.

ஆக நாளொன்றுக்கு 86,400 வினாடிகள் உங்களுக்கு கொடுக்கப்படுகின்றன. இப்போ து முன் சொன்ன இரண்டு நிபந்தனைகளையும் பொருத்திப் பாருங்கள்.

நேரத்தை திரும்ப உருவாக்க முடியாது என்பதால், இதனை புத்திசாலித்தனமாக எப்ப டி செலவழிக்கிறோம் என்பதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது.

நமக்குப் பொதுவாக உள்ள பிரச்சனை என்னவென்றால்,

'நேரம் போதவில்லை' என்ற கவலைதான்.

'காலையில் அலுவலகத்திற்கு போய்விட்டு மாலையில் வீடு திரும்பும் வரை தொடர்ந்து வேலை பார்த்துக் கொண்டேதான் இருக்கிறேன். ஆனால் எந்த வேலையும் முடிந்த பாடு இல்லை' என்ற வருத்தம் நம்மில் பலருக்கும் இருக்கிறது. நேரத்தை முறையாகாத் திட்டமிடாததே இதற்கு கரணம்.



ஆக மறுநாள் காலையில் அலுவலகம் சென்று திட்டமிடலாமே என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், காலையில் நீங்கள் அலுவலகத்திற்கு கிளம்புகிற பதற்றத்தில் சில வேலைகளை மறந்து விடக்கூடும் உள்ளே நுழைந்தவுடன் பிறருடன் பேசுவது. மீட்டிங் செ ல்வது, இ–மெயில் பார்ப்பது போன்றவற்றில் கவனம் திசை மாறும் என்பதால், அப் போது திட்டமிடுவது சற்று கடினமாக இருக்கும்.

இது அன்றாட பிரச்சனைக்குத் தீர்வு என்றால், வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக பெரியதொரு கோணத்தில் பார்க்கிறபோது, நமக்கு உழைக்க மொத்தம் எவ்வளவு ஆண்டுகள் கிடைக்கின்றன தெரியுமா?



ஒரு இந்தியனின் சராசரி வயது 7 0 என்று வைத்துக் கொள்வோம் முதல் 20 ஆண்டுகள் படிப்பதில் போய்விடும். கடைசி 10 ஆண்டுகள் உடல் வலுவின்மை காரணமாக பென் ஷனை எதிர்பார்த்தே கரைந்துவிடும் இடைப்பட்ட 4 0 ஆண்டுகளில் சனி ஞாயிறுகள். பண்டிகை தினங்கள், அரசு விடுமுறைகள், திருவிழாக்கள், திருமணங்கள் உடல் நலமின்மை போன்றவற்றில் சுமார் 15 ஆண்டுகள் கழிந்துவிடும்.

மீதம் இருப்பது 25 ஆண்டுகள் மட்டும் தான். இந்த 25 ஆண்டுகளிலும், சராசரியாக மூன்றில் ஒரு பங்கு நேரத்தைத் தான் (அதாவது நாளொன்றுக்கு 8 மணி நேரம்) உழைப்பிற்கு ஒதுக்குகிறோம். இதற்குள் நீங்கள் ஓடி ஓடி உழைத்து பணத்தைக் குவித்தாக வேண்டும்.

அதனால் தான் வெற்றியாளர்கள் பணத்தை விட நேரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

உறங்கி, உறங்கி கழிப்பது, வீணாக ஊரைச் சுற்றுவது, பைசா பிரயோஜனம் இல்லாத வீண் விவாதங்களில் நேரம் செலவழிப்பது, மோட்டு வலையைப் பார்த்து வெட்டியாக அமர்ந்திருப்பது, காதலில் தோல்வியுற்று தாடி வளர்த்துக் கொண்டு தேவதாசாகத் தி ரிவது... இவற்றிலெல்லாம் வெற்றியாளர்கள் தமது நேரத்தை வீணடிப்பதில்லை.

மாறாக, புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வது, நிறைய மனிதர்களைச் சந்திப்பது. கண்காட்சிகளுக்கு செல்வது, தாம் சார்ந்து இருக்கும் துறை சம்பந்தமான நூல்களைப் படிப்பது.

ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களோடு நேரம் செலவழிப்பது போன்ற விஷயங்களில் கவனம் செலுத்துகிறார்கள்.



எனவே நேரத்தைச் சரியாகத் திட்டமிடுவதன் மூலமே நீங்கள் வெற்றியாளராக முடியு ம். குறித்து வைத்துக் கொள்ளுங்கள்... வெற்றியாளர்கள் பணத்தை மிச்சப்படுத்துவ தைவிட நேரத்தை மிச்சப்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள்.

இனி நீங்கள் செய்ய வேண்டியது. ஒவ்வொரு நாளும் நீங்கள் எழுந்ததிலிருந்து தூங்கு ம் வரை எந்தெந்த வேலைக்கு எவ்வளவு நேரம் செலவு செய்கிறீர்கள் என்று பட்டியலிட்டுப் பாருங்கள் குறைந்தது. நாளொன்றுக்கு 4 மணி நேரத்தை நீங்கள் வீணாக்கிக் கொண்டிருப்பது தெரியும்.

## புத்தகங்களைப் பற்றி அறிஞர்கள்

- புத்தகங்களை நண்பர்களை தேர்ந்தெடுப்பது
  போல் தேர்வு செய்திட வேண்டும் – தாமஸ் ஹூட்
- புத்தகங்கள் இல்லாத வீடு.
  ஜன்னல்கள் இல்லாத அறை போன்றது – எச்.மான்.
- நம்மை அதிகமாக சிந்திக்கச் செய்பவை.
  நமக்கு அதிகமாக உதவக்கூடியவை புத்தகங்களே
  – தியோடர் பார்க்கர்
- ஒருமுறை படிக்கத் தகுந்த பல நூல்கள் இருமுறை
  படிக்கக்கூடியவையாக இருக்கும் –மார்லி.

# 5

## நற்றமிழையும், நகரத்தார் பண்பாட்டையும் திங்கள் தோறும் வளர்க்கும் மின்னிதழ் நாம் நகரத்தார் நல்லிதழ்!

நாம் நகரத்தார் மின்னிதழ் ஐந்தாம் ஆண்டைத் தொட்டு, தமிழ்கூறு நல்லுலகில் குறிப்பாக நகரத்தார் சமுதாயம் பாராட்டும் **இலக்கிய, ஆன்மீக, பண்பாட்டு** இதழாக தொடர்ந்து மலர்ந்து வருவது என்னை பெருதும் வியக்கவைக்கிறது.தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக இதழின் வாசகன் என்ற முறையில் இதழின் வளர்ச்சியை நான் பிரமிப்புடன் பார்க்கிறேன். இளஞ்செடியாக இருந்த மின்னிதழ் இன்று ஆலமரம் போல அசைக்க இயலாத வண்ணம் உயர்ந்து நிற்கிறது.

இதற்குக் காரணம் எந்தவிதமான இலாப நோக்கமின்றி நகரத்தார் சமுதாய மேம்பாட்டுக்காக இவ்விதழைத்துவங்கிய பதிப்பாசிரியர் நற்சாந்துப்பட்டி இராம சொக்கலிங்கம் அவர்கள். அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.அவரது அயராத சேவையைப் பாராட்டி பதிப்புச்சுடர், மின்னிதழ் நாயகர் போன்ற விருதுகளையெல்லாம் நாம் நகரத்தார் மின்னிதழ் பெற்றுவருவது சிறப்பு..

எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாக இந்த இதழ் வாசகர்களைச் சென்று அடைகிறது. வளர்ந்து டிஜிட்டல் உலகில் அனைத்து இதழ்களும் இன்றைய வாசகர்களின் வசதிக்கேற்ப மின்னிதழாக மாறி வரும் நிலையில், இராம சொக்கலிங்கம், நான்கு ஆண்டுகளுக்கு முன்பே, எதிர்காலத்தைத் திட்டமிட்டு, மின்னிதழாகக் கொண்டு வந்தது அவரது எதிர் காலம் குறித்த

திட்டமிடலை காட்டுகிறது. வளவுக்குள் என்ற தலைப்பிலான அவரது தலையங்கம் துவங்கி, இதழில் இடம்பெறும் வணிகம், இலக்கியம், சமையல், பாரம்பரியம், வாழ்வியல், ஆரோக்கியம், ஆன்மீகம், நிதிமேலாண்மை, சிறுவர் பக்கம், கவிச்சோலை, தன்னம்பிக்கை கட்டுரை, ஜோதிடம் என பக்கத்துக்குப் பக்கம் நவரசங்களையும் கலந்து தரும் அமுதப்பெட்டமாக மின்னுகிறது நாம் நகரத்தார் மின்னிதழ். மாதந்தோறும் எனக்கான ஒரு தலைப்பைத்தந்து, அத்தலைப்புக்கேற்ற ஒரு கட்டுரை எழுதி வாங்கி, இலக்கிய உலகத்தில் என்னைக்கொண்டு சேர்த்த இதழ்களில் நாம் நகரத்தார் இதழ் குறிப்பிடத்தக்கது.

இன்று எனது கட்டுரைகளையெல்லாம் தொகுத்து முயற்சியே மூச்சுக்காற்று என்ற தலைப்பில் ஆன்றோர்கள், சான்றோர்கள் நிறைந்த அவையில் வெளியிட்ட பெருமை நாம் நகரத்தார்க்கு உண்டு.தொடர்ந்து எனது வாழ்வியல் கட்டுரைகள் பெண் கதவு ! ஆண் பூட்டு ! என்ற தலைப்பில் இதழில் வெளியாகி வாசகர்களின் பாராட்டைப்பெற்றுவருவதற்கு பதிப்பாசிரியர் இராம சொக்கலிங்கம் அவர்களுக்கு நன்றி பாராட்டுவதில் பெருமை அடைகிறேன்.

மேலும் இதழ் வெளிவர உறுதுணையாக இருக்கும் இதழாசிரியர் நல்ல பல கட்டுரைகளை நயம்பட எழுதும் திருமதி உமாராணி சொக்கலிங்கம் ( உமையாள் ) அவர்களுக்கும் இதழின் முதன்மை வாசகன் என்ற முறையில் எனது பாராட்டுகள்.

வாழி நகரத்தார் உலகம் உள்ள காலம் வரை என்பது போல
உலகம் உள்ள வரை நாம் நகரத்தார் இதழ் சிறக்கும்!
நன்மை பயக்கும்! எண்ணம்! திண்ணம்!



சேவு.முத்துக்குமார்
முதுகலை ஆசிரியர் (தமிழ்)
ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மேல்நிலைப் பள்ளி
காரைக்குடி.

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

## மழையே மழையே வந்தாயே



மழையே மழையே வந்தாயே
… மண்ணில் ஈரம் தந்தாயே
மரமும் செடியும் வளரத்தான்
… வானில் இருந்து வந்தாயே
மின்னல் இடியும் செய்வாயே
… மிரட்டிக் கொஞ்சம் பார்ப்பாயே
அம்மா அருகில் இருக்கையிலே
… அடடா எனக்கொரு பயமில்லையே!

## புள்ளிக் கோலம்

பள்ளிக் கூட நோட்டு
… பழைய ஆண்டு நோட்டு
புள்ளிக் கோலம் பழக
… வள்ளி கேட்டாள் நேற்று.
வெள்ளிக் கிழமை இன்று
… விடியலில் வாசலில் நின்று
வள்ளிப் பாப்பா சிரித்தாள்
… வண்ணக் கோலம் போட்டு!



# அந்தமானைப் பாருங்கள்... அழகு..!



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி

அந்தமான் என்பது அழகின் பொருள்
பகல் மற்றும் இரவில் தொடரும் நிழல்

இயற்கை அழகின் ஒருங்கிணைப்பு
செயற்கைக்கு இங்கே செயலிழப்பு

கடல்களின் நடுவே சிறைவாசம்
வனவாசம் அல்ல மனவாசம்

அன்றைய நாளது நான்கிற்கே விடியல்
மாலை ஐந்திற்கு பகல் பொழுது முடிதல்

போராட்டமின்றி செல்லுலர் ஜெயிலில்
வண்ண விளக்குகள் மின்னும் இரவில்

வாடகை சைக்கிளும் பிடிக்க ஒரு ஆளும்
சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்ள போதும்

கப்பல் விமானம் பேருந்தைப் போல்
கவலைகள் மறக்க (இடம்)பெயர்தல் மேல்

மேடாய் இறக்கமாய் நீலகிரியின் நகலாக
மனதில் நிலைத்த மலரும் நினைவாக

குட்டிக் குட்டித் தீவுகளின் சங்கமம்
அளவில்லாத அழகுகளின் அடுக்ககம்

உயரத்தால் உயர்ந்து நிற்கும் தென்னை
பிறரைக் குளிர்வித்து தொடுகிறது விண்ணை

தொலைதூரப் பயணம் தான் அந்தமான்
சென்று வந்தால் அனைவருக்கும் இன்பந்தான்..!

# 5

## வாசிப்பின் புதிய அனுபவம்

நவீன உலகில் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்ட நிலையில், பத்திரிக்கைத் துறையில் புதிய சாதனை படைத்து ஐந்தாம் ஆண்டில் வெற்றிகரமாக அடி எடுத்து வைக்கும் நாம் நகரத்தார் மின்னிதழ் பதிப்பாளர் நச்சாந்துபட்டி இராம. சொக்கலிங்கம் அண்ணன் அவர்களுக்கும், இதழாசிரியர் திருமதி.உமாராணி சொக்கலிங்கம் ஆச்சி அவர்களுக்கும் உளங்கனிந்த வாழ்த்துகள்.

ஆன்மீகம், சமையல், கவிச்சோலை, சிறுவர் பக்கம், சோதிடம், வணிகம், சிறுகதை, இலக்கியம்,மொழி மற்றும் நகரத்தார் வாழ்வியல் குறித்த தரமானசெய்திகளை நயமாக எழுத்து வடிவில் இளைய சமுதாயமும் வாசித்துப் பயன்பெறும் வகையில் மாதந்தோறும் மின்னிதழாக வெளியிடுவது மிகவும் சிறப்பு.

கைபேசியில் புத்தமாக வாசிக்க ஏதுவாக மேம்படுத்தப்பட்ட எளிய வடிவில் மொபைல் செயலி டௌன்லோட் செய்யவும், பி.டி.எப் வடிவிலும் வெளியிட்டு கூடுதல் வாசகர்களை மின்னிதழ் தன்பக்கம் ஈர்த்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

நகரத்தார் நிகழ்வுகள், சடங்குகள் மற்றும் பண்டிகைகளை மையப்படுத்தி வருடம் முழுவதும் சிறப்பிதழ்களாக புது மெருகுடன் புதிய சாதனை படைத்து உலா வருவது மகிழ்ச்சி.

வண்ணமயமான படங்களுடன் ஏராளமான செய்திகளை தாங்கி வரும் மின்னிதழ் பக்கங்களை, ஓர் நாவல் வாசிப்பதைப் போல விறுவிறுப்புடன் அடுத்தடுத்த பகுதிகளைத் தொடர்ந்த வாசிக்கத் தூண்டுவது நாம் நகரத்தார் மின்னிதழின் சிறப்பாம்சம்; இது எனது தனிப்பட்ட அனுபவம்.

கண்ணனூர் பாலசுப்பிரமணிய சுவாமி (முருகனுக்கான முதல் கற்றளிக் கோயில்) குறித்த மின்னிதழ் செய்திகள் கூடுதல் சிறப்பு.

பலதரப்பட்ட செய்திகளுடன் பன்முகத் திறமையாளர்களின் எழுத்தாற்றலை அடையாளம் காட்டி வெளி உலகிற்கு அறிமுகம் செய்து ஊக்குவிக்கும் உயரிய பண்பு பாராட்டுதலுக்குரியது.

நாம் நகரத்தார் மின்னிதழ் மென்மேலும் சாதனைப் படைத்து வாழ்க! வளர்க!

அன்பு நட்புடன்,
கவிதாயினி. அரு. சிவகாமி இராமனாதன்,
ஒக்கூர் – நவிமும்பை



வெற்றிகரமான 5ஆம் ஆண்டில்

# நோற்பது கைவிடேல்



– முத்தப்பன் இராமநாதன். BE MBA
மேலைச்சிவபுரி

நோன்பு என்றால் என்ன..? சுடுவது சூடு..படுவது பாடு..கெடுவது கேடு..விடுவது வீடு..நோற்பது நோன்பு..! இப்பொழுது நோற்றல் என்றால் என்ன என்ற கேள்வி எழுகிறது. நோற்றல் என்பது தவம் செய்தல், விரதமிருத்தல் என்ற பொருள் அறிகிறோம். பாரதி கூட தன் புதிய ஆத்திச்சூடியில் "நோற்பது கைவிடேல்" என்று வலியுறுத்துகிறார்.



எதற்காக நோற்றல் அவசியமாகிறது ? ஏன் நோன்பிருக்க வேண்டும் ? எப்படி இருக்க வேண்டும்? எப்பொழுதெல்லாம் நோன்பிருக்க வேண்டும். நாம் நம் மனதில் ஒரு காரியம் ஈடேற எடுக்கும் முயற்சிகளோடு நோற்றலும் ஒன்றாகிறது. ஏன் நோன்பிருக்க வேண்டும் என்றால்,நம் விருப்பத்தை நம் இலட்சியத்தை மனம் திரும்பத் திரும்ப உருப்போட்டு ஆழ் மனதில்

பதியச் செய்கிறது. அப்படி ஒரு விருப்பம் மனதில் பதியும் பொழுது அந்த நல் விருப்பம் ஈடேற வழி வகைகளை கண்டறிந்து மனமானது நம் முன்னே கொண்டு நிறுத்துகிறது.



'தவமாய் தவமிருந்து பெற்ற பிள்ளை' என்றெல்லாம் சொல்லக் கேட்கிறோம். தவம் என்பது ஒரு விரதம், இடர்களை பொருத்தல். அந்த வகையில் நோற்றல் என்பதை பசி பொறுத்தல், விரதம் உண்ணாநோன்பு என்று சொல்கிறோம் .எல்லா மதத்தினரும் ஏதேனும் ஒரு நிகழ்வையொட்டி நோன்பு நோற்றல் ஒரு சடங்காக உள்ளது. அந்த வகையில் நகரத்தார்களுக்கு மட்டுமே உரித்தான பிள்ளையார் நோன்பு மிகச் சிறப்பானது. இந்த நோன்பு திருக்கார்த்திகை நாளில் இருந்து 21ம் நாள் நாள் சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் கூடி வருகிற நன்னாளில் விநாயகரை முன்னிறுத்தி பிள்ளையார் நோன்பு அனுசரிக்கப்படுகிறது.

வெற்றிகரமான 5ஆம் ஆண்டில்




பண்டைய காலத்தில் இருபத்தி ஒரு நாளும் ஒருபொழுது விரதமிருந்து பிள்ளையார் நோன்பு அன்று பல இனிப்பு வகைகள் செய்து இறைவனுக்கு படைத்து, நாள் கணக்கிற்காக ஒவ்வொரு நாளும் எடுத்து வைத்த இழையை ஒன்றுசேர்த்து திரியாக்கி கருப்பட்டிப் பாகினை கூம்பு வடிவாக்கி இழை சேர்த்து பிடித்து விளக்கில் காண்பித்து நெருப்போடு அதை உட்கொண்டனர். தற்சமயம் நோன்பு என்ற தத்துவத்தின் சாரத்தை விட்டு கூடிக் களிப்பதற்காகவும்,உண்டு மகிழ்வதற்கும் ஆன ஒரு சம்பிரதாயமாக பிள்ளையார் நோன்பு மாறிவிட்டது.



ஆதலால் அனைவரும் மீண்டும் ஒரு உறுதி எடுப்போம் பிள்ளையார் நோன்பு அன்றாவது உறுதிப்பாட்டுடன் விரதமிருந்து இறைவழிபாடு செய்து நம் மனதை தூய்மை படுத்துவோம். அப்படி முடியாதவர்கள் நோன்பு இருக்கா விட்டாலும் பரவாயில்லை பிறர் சொல்லும் தீய சொற்களை பொறுத்துக்கொண்டு இருந்தாலே போதும். அது நோன்பினை விட சிறந்தது.

இதைத்தான் வள்ளுவர்,

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின் " என்கிறார்.

ஆகவே பிறர் சொல்லும் தீய சொற்களை பொறுத்துக் கொள்வது உண்ணா நோன்பை விட சிறந்தது .அப்படி செய்யும்போது தீய சொற்களை சொன்னவர்களே வெட்கித் தலை குனிந்து விடுவார்கள். குடும்பங்களில் சமுதாயத்தில் விரிசல்கள் ஏற்படாமல் என்றும் எங்கும் இன்சொல் மீண்டும் தழைக்கும்.



இந்த பிள்ளையார் நோன்பில் முடிந்தவர்கள் விரதம் இருப்போம். ஆனால் அனைவரும் தீச்சொல் பொறுத்து அதனால் இன்சொல் பெருக்குவோம்.

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

5

"**நாம் நகரத்தார் மின்னிதழ்**"க்கு சிறப்பான எதிர்காலம் அமைய மனமார்ந்த வாழ்த்துகள். இன்னும் ஒரு இளம் சமூக இணையதள மின்னிதழ், 05 வயது தீவிரவளர்ச்சியைக்கண்டு ஒரு இளம் நகரத்தாராக பெருமை கொள்கிறேன். எதிர் வரும் காலம் எப்படி இருந்தாலும், அனைத்து எழுத்தாளர்கள் ஆதரவுடன் "**நாம் நகரத்தார் மின்னிதழ்**" சிறப்பாக புதிய புதிய படைப்புகளுடனும் செய்திகளுடனும் வாசகர்கள் மனதில் பல்வேறு உயரங்களை அடைய வாழ்த்துகள்.

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் )
/ ஹர்ஷவர்த்தினி ஸ்ரீ ( நெற்குப்பை )
நகரத்தார் கேப்பிட்டல்



வெற்றிகரமான 5ஆம் ஆண்டில்

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர்கள் கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) மற்றும் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை பற்றிய விரிவான பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் அறியலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

**நிறுவனத்தை பற்றி:–**

ASHAPURA MINECHEM LIMITED (527001/ASHAPURAMIN)

ASHAPURA MINECHEM LIMITED

## நிறுவனத்தை பற்றி:-

ஆஷாபுரா மினெச்செம் லிமிடெட் என்பது ஆஷாபுரா குழுமத்தின் முதன்மை நிறுவனமாகும், மேலும் இந்தியாவின் மிகப்பெரிய சுரங்க உரிமையாளர் மற்றும் பெண்டோனைட் ஏற்றுமதியாளராக நன்கு அறியப்படுகிறது. நாடு முழுவதும் 6 0 மில்லியன் டன்களுக்கும் அதிகமான தரமான சோடியம் மற்றும் கால்சியம் பெண்டோனைட் இருப்புக்களைக் கொண்ட பெண்டோனைட்டின் முதல் ஐந்து உலகளாவிய உற்பத்தியாளர்களில் இதுவும் ஒன்றாகும். பெண்டோனைட்டை பதப்படுத்துவதில் இது நான்கு தசாப்த கால அனுபவத்தைக் கொண்டுள்ளது மற்றும் உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உலகளாவிய தொழில்நுட்பம், சிறந்த கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுக உள்கட்டமைப்பு ஆகியவற்றால் நிரப்பப்பட்டுள்ளது.

பெண்டோனைட்டின் முதல் ஆறு உலகளாவிய உற்பத்தியாளர்களில் ஆஷாபுரா மினெச்செம் லிமிடெட் ஒன்றாகும், மேலும் 3500 ஏக்கர் பெண்டோனைட் சுரங்கங்களையும் 5500 ஏக்கர் பாக்சைட் சுரங்கங்களையும் சொந்தமாகக் கொண்டுள்ளது.

இந்த நிறுவனம் இந்தியாவில் பல இடங்களில் செயல்படுத்தல், அரைத்தல் மற்றும் பதப்படுத்தும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. இதற்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சீனாவில் முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனம் மற்றும் அலுவலகங்கள் உள்ளன.

1960 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஆஷாபுரா குழுமம், பெண்டோனைட் வணிகத்துடன் தொடங்கி, நாட்டில் தொழில்துறை கனிமங்களின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்து தனக்கென ஒரு முக்கிய இடத்தை உருவாக்கியது.

ஆஷாபுரா இந்தியாவின் மிகப்பெரிய பல–கனிம தீர்வுகள் வழங்குநராகும், மேலும் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 10 MMT பல்வேறு கனிமங்களை நகர்த்துவதற்கு பொறுப்பாகும்.

இந்தியாவில் பெண்ட்டோனைட் வணிகத்தின் முன்னோடிகளாக இருப்பதோடு,ஆஷாபுரா மினெச்செம் லிமிடெட் உலகின் மிகப்பெரிய வர்த்தக பாக்சைட் ஏற்றுமதியாளர்களில் ஒன்றாகும், மேலும் ப்ளீச்சிங் களிமண், ஜியோசிந்தெடிக் களிமண் லைனர்கள், களிமண் வினையூக்கிகள் மற்றும் கால்சின் செய்யப்பட்ட பாக்சைட் ஆகியவற்றிற்கு நாட்டின் முன்னணி நிறுவனமாகவும் பெருமை கொள்கிறது.

1998 ஆம் ஆண்டில், நிறுவனம் பாக்சைட்டில் பன்முகப்படுத்தப்பட்டு 1 0 0 மில்லியன் டன் இருப்புக்களை வைத்திருக்கிறது. இந்த நிறுவனம் உலக வர்த்தக சந்தையில் 8% பங்கைக் கொண்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு AMCOL இன்டர்நேஷனல் கார்ப்பரேஷன் ஆஷாபுரா மினெச்செம் லிமிடெட் இன் 20% பங்குகளை வாங்கியது. இதன் காரணமாக ஆஷாபுரா மினெச்செம் லிமிடெட் பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட பெண்ட்டோனைட் தயாரிப்புகளுக்கான AMCOL தொழில்நுட்பத்தை அணுக முடிந்தது. இந்த தயாரிப்புகள் எண்ணெய் மற்றும் நீர் கிணறு தோண்டுதல், ஃபவுண்டரிகள், இரும்பு தாது துகள்களாக மாற்றுதல், சிவில் பொறியியல் போன்ற பல்வேறு தொழில்களில் பயன்பாடுகளைக் கொண்டுள்ளன.

ஆஷாபுரா குழுமம் இரும்புத் தாது, ப்ளீச்சிங் களிமண், கயோலின் மற்றும் பாரைட்டுகளிலும் வணிக ஆர்வங்களைக் கொண்டுள்ளது. இந்தக் குழுமம் பெல்ஜியம், நைஜீரியா, ஓமன் மற்றும் மலேசியாவில்

சுரங்க மற்றும் கனிம பதப்படுத்தும் அலகுகளைக் கொண்டுள்ளது. இந்தியாவில் இது குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒரிசாவிலிருந்து செயல்படுகிறது.

பல தசாப்தங்களாக ஆஷாபுரா இந்தியாவிலும் சர்வதேச அளவிலும் தனது செல்வாக்கை பெருமளவில் விரிவுபடுத்தியுள்ளது. இன்று பெல்ஜியம், ஓமன் ஆகிய இடங்களில் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் சீனாவின் துபாயில் சந்தைப்படுத்தல் அலுவலகங்களுடன் உலகளாவிய இருப்பைக் கொண்டுள்ளது. இந்தியாவில் நாடு முழுவதும் விநியோக மையங்களைக் கொண்டுள்ளது, அவை புவியியல் ரீதியாகவும் வாடிக்கையாளர் மையமாகவும் உள்ளன. பெரும்பாலும் ஃபார்ச்சூன் 500 வாடிக்கையாளர்களைக் கொண்ட ஆஷாபுரா கடந்த சில தசாப்தங்களாக பல நிறுவனங்களுடன் வலுவான கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது, அதே நேரத்தில் அதன் சிறந்த தயாரிப்புகள் மற்றும் சேவைகளை அடைந்துள்ளது. ஆஷாபுராவின் தயாரிப்புகள் மற்றும் பிராண்டுகள் இன்று உலகளாவிய ஏற்றுக்கொள்ளலையும் அங்கீகாரத்தையும் கொண்டுள்ளன, இது குழுவிற்கு மகத்தான மதிப்பைக் கொண்டுவருகிறது.

ஆஷாபுரா அதன் மூலோபாய இடங்கள் மற்றும் உலகெங்கிலும் நன்கு திட்டமிடப்பட்ட உற்பத்தி வசதிகள் மூலம் ஆதரிக்கப்படுகிறது. அதன் பெண்டோனைட் சுரங்க நடவடிக்கைகள் மற்றும் இருப்புக்கள் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள பூஜ் மற்றும் கட்ச் ஆகிய இடங்களில் மையப்படுத்தப்பட்டுள்ளன.

ஆஷாபுரா பூஜ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மூன்று உற்பத்தி வசதிகளையும், இந்தியாவில் பல செயற்கைக்கோள் ஆலைகளையும் கொண்டுள்ளது. கூடுதலாக, குறிப்பாக ஐரோப்பிய சந்தையைப் பூர்த்தி செய்வதற்காக, பெல்ஜியத்தின் ஆண்ட்வெர்பனில் அமைந்துள்ள ஒரு பெண்டோனைட் செயலாக்க வசதியையும் கொண்டுள்ளது. அதே மாதிரி ஓமானின் சோஹாரில் பெண்டோனைட்டுக்காக நகலெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் உலகின் 3 வது பெரிய பெண்டோனைட் உற்பத்தியாளராகவும், உலகின் 3வது பெரிய ப்ளீச்சிங் களிமண் உற்பத்தியாளராகவும், இந்தியாவின் மிகப்பெரிய பயனற்ற பொருள் உற்பத்தியாளராகவும், இந்தியாவின் மிகப்பெரிய முலாம் பூசும் பொருட்களாகவும் உள்ளது.

**நிறுவனத்தின் முக்கிய தயாரிப்புகள் மற்றும் சேவைகள்:–**

- ***Bentonite***
- ***Bauxite***
- ***Kaolin***
- ***Calcined China Clay (CCC)***
- ***Ground Calcium Carbonate (GCC)***
- ***Refractory materials***
- ***Hydrocarbon exploration solutions***
- ***Adsorbent solutions***
- ***White performance minerals***
- ***Super specialty refined mineral products***

**உலகளாவிய பங்கலிப்பு/ இருப்பு:-**

- ஆஷாபுரா மினெகெம் இந்தியாவிலும் சர்வதேச அளவிலும் செயல்பாடுகளுடன் வலுவான உலகளாவிய இருப்பைக் கொண்டுள்ளது.
- இந்நிறுவனம் ஆப்பிரிக்காவின் கினியாவில் முழுமையாக செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்ட துறைமுகத்தைக் கொண்டுள்ளது, இது பாக்சைட் ஏற்றுமதி அளவை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**அடிப்படைக் கண்ணோட்டம்:-**

- 41.70 ஒருங்கிணைந்த EPS கொண்ட நிறுவனம் (2025-09 அன்று முடிவடைந்த பன்னிரண்டு மாதங்களில் பின்தங்கியுள்ளது),
- தொழில்துறை PE 9.15 உடன் ஒப்பிடும்போது ஒருங்கிணைந்த PE விகிதம் 16.76. முக மதிப்பு 2.
- கடந்த 5 ஆண்டுகளில் நிறுவனம் 43.2% கூட்டு ஆண்டு வளர்ச்சி விகிதத்தில் நல்ல வளர்ச்சியை ஈட்டியுள்ளது.
- சமீபத்திய தரவுகளின்படி, பிரமோட்டர்கள் 47.79% பங்குகளை வைத்திருக்கின்றனர். கடந்த 1.5 ஆண்டுகளில், பிரமோட்டர்கள் பங்கு 45.39% இலிருந்து 47.79% ஆக அதிகரித்துள்ளது.

## நிறுவன அடிப்படைகள்:-

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x) 16.42 | EPS - TTM (₹) 41.70 |
| MCap (₹ Cr.) 6,540.19 | Sectoral MCap Rank 6 |
| PB Ratio (x) 5.31 | Div Yield (%) 0.15 |
| Face Value (₹) 2.00 | Beta 1.80 |
| VWAP (₹) 684.90 | 52W H/L (₹) 754.90 / 301.60 |

**Ashapura Minechem Share Price Insights**

- Employee & Interest Expense
- Increase in Cash from Investing
- Ashapura Minechem Share Price Update

**Ashapura Minechem Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↑0.76% |
| 1 Week | ↓-3.71% |
| 1 Month | ↑7.57% |
| 3 Months | ↑20.41% |
| 1 Year | ↑68.55% |
| 3 Years | ↑667.54% |
| 5 Years | ↑755.28% |

## ஆஷாபுரா மினெகெம் பங்கு விலை புதுப்பிப்பு.

ஆஷாபுரா மினெகெம் லிமிடெட் பங்கு விலை அதன் முந்தைய முடிவான ரூ.679.55 இலிருந்து 0.76% உயர்ந்துள்ளது. ஆஷாபுரா மினெகெம் லிமிடெட் பங்கின் கடைசி வர்த்தக விலை 684.65 ஆகும்.

## முதலீட்டிலிருந்து வரும் பணத்தில் அதிகரிப்பு.

முதலீட்டு நடவடிக்கைகளுக்கு ரூ.391.5 கோடியைப் பயன்படுத்தியுள்ளது, இது ஆண்டுக்கு ஆண்டு 42.81% அதிகரிப்பு ஆகும். (மூலம்: ஒருங்கிணைந்த நிதியியல் அறிக்கை)

## நிறுவன நிதி நிலை:-

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

INSIGHTS

**Employee & Interest Expense**

Company has spent 3.25% of its operating revenues towards interest expenses and 5.81% towards employee cost in the year ending Mar 31, 2025. (Source: Consolidated Financials)

| QUARTERLY ANNUAL | SEP 2025 | JUN 2025 | MAR 2025 | DEC 2024 | SEP 2024 |
|---|---|---|---|---|---|
| Total Income | 953.94 | 1,361.52 | 611.33 | 879.25 | 605.25 |
| Total Income Growth (%) | ↓-29.94 | ↑122.71 | ↓-30.47 | ↑45.27 | ↓-15.70 |
| Total Expenses | 853.97 | 1,205.28 | 500.18 | 742.99 | 559.70 |
| Total Expenses Growth (%) | ↓-29.15 | ↑140.97 | ↓-32.68 | ↑32.75 | ↓-13.10 |
| EBIT | 99.97 | 156.24 | 111.16 | 136.25 | 45.55 |
| EBIT Growth (%) | ↓-36.02 | ↑40.56 | ↓-18.42 | ↑199.13 | ↓-38.39 |
| Profit after Tax (PAT) | 96.61 | 109.86 | 86.49 | 105.42 | 44.33 |
| PAT Growth (%) | ↓-12.06 | ↑27.02 | ↓-17.95 | ↑137.82 | ↓-25.59 |
| EBIT Margin (%) | 10.48 | 11.48 | 18.18 | 15.50 | 7.53 |
| Net Profit Margin (%) | 10.13 | 8.07 | 14.15 | 11.99 | 7.32 |
| Basic EPS (₹) | 10.11 | 11.50 | 9.08 | 11.15 | 4.71 |

All figures in Rs Cr, unless mentioned otherwise — View Details

## பணியாளர் & வட்டி செலவு.

மார்ச் 31, 2025 உடன் முடிவடைந்த ஆண்டில், நிறுவனம் அதன் இயக்க வருவாயில் 3.25% வட்டி செலவுகளுக்காகவும், 5.81% பணியாளர் செலவுகளுக்காகவும் செலவிட்டுள்ளது. ( மூலம்: ஒருங்கிணைந்த நிதியியல் அறிக்கை)

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 3,930.55 | 3,310.69 | 3,049.61 | 2,424.31 | 2,233.30 |
| Total Assets Growth (%) | 18.72 | 8.56 | 25.79 | 8.55 | 22.70 |
| Total Liabilities | 2,708.04 | 2,393.42 | 2,392.38 | 1,903.27 | 1,799.19 |
| Total Liabilities Growth (%) | 13.15 | 0.04 | 25.70 | 5.79 | 22.06 |
| Total Equity | 1,222.51 | 917.27 | 657.23 | 521.03 | 434.11 |
| Total Equity Growth (%) | 33.28 | 39.57 | 26.14 | 20.02 | 25.43 |
| Current Ratio (x) | 1.23 | 1.19 | 1.28 | 1.14 | 1.16 |
| Total Debt to Equity (x) | 0.93 | 1.06 | 1.14 | 1.22 | 1.48 |
| Contingent Liabilities | 496.07 | 505.32 | 552.22 | 438.05 | 259.03 |

*All figures in Rs Cr, unless mentioned otherwise*

View Details »

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

INSIGHTS

**Cash from Operations vs PAT**
Operating cash flow of Rs 188.4 cr is 0.64 times compared to the reported net profit of Rs 295.81 cr. (Source: Consolidated Financials)

**Increase in Cash from Investing**
Company has used Rs 391.5 cr for investing activities which is an YoY increase of 42.81%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 188.40 | 148.06 | 97.30 | 112.62 | -19.64 |
| Net Cash used in Investing Activities | -391.50 | -274.15 | -129.69 | -62.94 | -167.77 |
| Net Cash flow from Financing Activities | 177.83 | 190.72 | 79.59 | -58.77 | 182.15 |
| Net Cash Flow | -25.27 | 64.63 | 47.21 | -9.09 | -5.26 |
| Closing Cash & Cash Equivalent | 109.35 | 134.62 | 73.55 | 26.35 | 35.44 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | -18.77 | 83.02 | 179.16 | -25.65 | -12.93 |
| Total Debt/ CFO (x) | 6.16 | 6.63 | 7.77 | 5.65 | -32.81 |

*All figures in Rs Cr, unless mentioned otherwise*

View Details »

## செயல்பாடுகளிலிருந்து வரும் ரொக்கம் vs PAT.

ரூ. 188.4 கோடி இயக்க ரொக்கப் பாய்வு, அறிவிக்கப்பட்ட நிகர லாபமான ரூ. 295.81 கோடியுடன் ஒப்பிடும்போது 0.64 மடங்கு ஆகும். (மூலம்: ஒருங்கிணைந்த நிதியியல் அறிக்கை)

## முதலீட்டிலிருந்து வரும் பணத்தில் அதிகரிப்பு.

நிறுவனம் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு ரூ.391.5 கோடியைப் பயன்படுத்தியுள்ளது, இது ஆண்டுக்கு ஆண்டு 42.81% அதிகரிப்பு ஆகும். (மூலம்: ஒருங்கிணைந்த நிதியியல் அறிக்கை)

வெற்றிகரமான 5ஆம் ஆண்டில்

Income (P&L) | Balance Sheet | Cash Flow | **Ratios** — CONSOLIDATED

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 23.81 | 35.85 | 17.60 | 16.59 | 20.14 |
| Return on Capital Employed (%) | 16.50 | 12.97 | 11.50 | 10.58 | 10.42 |
| Return on Assets (%) | 7.52 | 8.66 | 3.83 | 3.56 | 3.91 |
| Interest Coverage Ratio (x) | 5.00 | 4.42 | 4.02 | 3.52 | 2.48 |
| Asset Turnover Ratio (x) | 0.76 | 0.83 | 0.67 | 0.42 | 51.40 |
| Price to Earnings (x) | 11.61 | 11.98 | 8.76 | 13.46 | 10.36 |
| Price to Book (x) | 2.76 | 3.69 | 1.54 | 2.23 | 2.09 |
| EV/EBITDA (x) | 10.01 | 13.83 | 6.55 | 9.06 | 8.56 |
| EBITDA Margin (%) | 16.24 | 11.60 | 14.12 | 15.25 | 15.31 |

## தொழில்நுட்ப விளக்கப்படம்:–




## சக நிறுவன ஒப்பீடு:–




**Peer Comparison**

Ashapura Minechem Stock Performance | **Ratio Performance** — SEE ALL PARAMETERS

| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| Ashapura Minechem | 16.42 | 5.35 | 23.81 | 7.52 | 26.70 | 13.39 |
| Coal India Ltd | 7.45 | 2.33 | 35.67 | 13.58 | 10.28 | 33.05 |
| NMDC | 9.34 | 2.21 | 22.03 | 15.95 | -1.39 | 38.99 |
| KIOCL | -145.84 | 11.90 | -11.95 | -8.93 | -40.44 | -32.14 |
| Guj Mineral Dev. | 15.52 | 2.43 | 10.69 | 8.84 | 3.49 | 31.49 |

## பங்குதாரர் பங்கஅமைப்பு:–

**Shareholding Pattern**

QOQ Change    Total Shareholdings



Showing Ashapura Minechem Shareholding as on Sep 2025

| CATEGORY | SEP 2025 | JUN 2025 | MAR 2025 | DEC 2024 |
|---|---|---|---|---|
| Promoters | 47.79 | 47.75 | 47.75 | 47.70 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 14.79 |
| FII | 18.02 | 16.42 | 16.56 | 16.00 |
| DII | 0.32 | 0.22 | 0.26 | 0.13 |
| Mutual Funds | 0.12 | 0.12 | 0.16 | 0.12 |
| Others | 33.87 | 35.61 | 35.42 | 36.16 |

**Shareholding Pattern**

QOQ Change    Total Shareholdings




Showing Shareholding as on Sep 2025

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 4,56,50,228 | 47.79 % | ˆ0.03 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 1,72,06,059 | 18.02 % | ˆ1.59 |
| DII | 3,04,691 | 0.32 % | ˆ0.10 |
| MF | 1,16,000 | 0.12 % | 0.00 |
| Others | 3,23,65,120 | 33.87 % | ↓-1.73 |

## ஆய்வாளரின் தனிப்பட்ட பார்வையில்:–

பெண்ட்டோனைட் உற்பத்தியில் உலகின் முதல் 6 நிறுவனங்களில் ஒன்றாக இருக்கும் இந்த நிறுவனம், தற்போது அடிப்படைகள் & நிதிநிலைகள் ஊக்கமளிப்பதாகவும் நன்றாகவும் உள்ளன. தனிப்பட்ட ஆய்வின்படி, தனிப்பட்ட ஆய்வின்படி நடுத்தர கால (8 மாதங்கள் முதல் 18 மாதங்கள் வரை) முதல் நீண்ட கால (24 முதல் 36 மாதங்கள் வரை வரை) முதலீட்டிற்கு ஏற்றதாக உள்ளது. நடுத்தர காலத்தில் 1050+ ஐக் காணலாம். நீண்ட காலத்தில் 1200+ ஐ ஆய்வுப் பார்வையில் எதிர்பார்க்கிறேன்.

# இந்த இதழில் எமது ஆய்வு பார்வையில் குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள் :

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, **West Coast Paper Mills Ltd...**
Entry... 380 - 400.
Target 450 and 500+ +

2, **Steel Authority of India Ltd..**
Entry 120 to 125.
Target 160 and 180++

3, **Hariom Pipe Industries Ltd...**
Entry 330 to 340.
Target 400 and 450++

4, **Bharat Electronics Ltd...**
Entry 360 to 370.
Target 420 and 460++

5, **Gail (India) Ltd...**
Entry 160 to 165.
Target 190 and 220++

6, **Zydus Wellness Ltd...**
Entry 400 to 410.
Target 460 and 500++

**பொறுப்புத் துறப்பு**

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

# NAGARATHAAR KAPITAL

(Will learn and earn together in wealth creating Journey)

## Webinar Course.

I. **Stock Market Course (Beginners).**
Basics, Fundamentals, Technical (Introduction).

II. **Stock Market Course (Advanced).**
Technical, Strategies.

## Why One Wealth Course?

Learn from Qualified and Experienced Expert Panelists.
Your search for in-depth Knowledge ends here.
You will become a Professional trader and Informed Investor.
Assist to Develops investment strategies to achieving financial goals
Got Learn about Different Market.
Personalized financial advice.

## Who can join?

I. Students.

II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.

III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.

IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.

**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
For january 2026 Class will be on 01/01/2026

**Webinar Timings** India Time: 17:30Hrs - 18.30Hrs / 21.00 - 22.00Hrs, On Week days & 17.00Hrs - 18.00Hrs / 20.00 - 21.00Hrs Week Ends.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

வெற்றிகரமான 5ஆம் ஆண்டில்

# விநாயகரும் கேது பகவானும்



–ஜோதிடர் எல்லி
9944865943



இன்றைய தமிழ்க்கூறும் நல்லுலகில் நிலவி வரும் பல்வேறு வழிபாட்டு முறைகளில் தலையாயது பிள்ளையார் வழிபாடு ஆகும். விநாயகர் அல்லது பிள்ளையார் வழிபாடு தமிழ் நாட்டிற்கு அறிமுகமான காலம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட சிலர் கி.பி 6ம் நூற்றாண்டில் தான் தமிழக இறை வழிபாட்டியலில் வந்ததாக முடிவுக்கு வருகிறார்கள். ஆனால் இது முற்றிலும் தவறான கருத்தாகும்.பிள்ளையார் வழிபாடு மிக தொன்மையான தமிழர் வழிபாட்டு முறைகளில் ஒன்றாகும்.

மிக பழமையான தமிழர் தத்துவங்களின் ஒன்றான ஆசீவக மரபு காலம் தொட்டு பிள்ளையார் வழிபாடு நடைமுறையில் இருந்திருக்கிறது. ஆசீவகம் மிக பழமையான சித்தர் வழிபாட்டியியல் ஆகும். இது தொல்லியல் ஆய்வுகளில் வெளிப்படுகிறது.





இந்தியாவின் மிக பழைமையான குடைவரை கோயில்களில் ஒன்று தமிழகத்தில் உள்ள காரைக்குடி பகுதியில் உள்ள கற்பக விநாயகர் கோயில் ஆகும். இது சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இது நெடுங்காலம் தொட்டு தமிழ் பழங்குடிகளில் ஒன்றான நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அதிகம் வாழும் பகுதியாகும்.

இது போன்ற பிள்ளையார் தனி சந்நிதி திருநெல்வேலி மாவட்டம் பழவூர் கிராமத்திலும் உண்டு அங்கு பெரும் பொதி விநாயகர் என்ற பெயரில் அருள் பாலித்து கொண்டிருக்கிறார்.

ஆப்கானிஸ்தானின் காந்தகார் பகுதியில் விநாயகர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது இது கி.பி 5 ம் நூற்றாண்டை சேர்ந்தது என தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த பகுதி silk root எனும் வணிக வழித்தடத்தில் அமைந்துள்ளதை உற்று நோக்கும் ஆய்வாளர்கள், இது நம்மூர் நகரத்தார்கள் (வணிக குடி) தொழில் நிமித்தமாக அங்கு சென்று குடியமர்ந்த போது எடுத்து சென்று வழிபட்டு இருக்கலாம் என கருதுகின்றனர்.



மேலும் பிள்ளையார் வழிபாடு பற்றிய பல்வேறு தகவல்கள் நமது இலக்கியங்களிலும் நமக்கு காண கிடைக்கிறது.

தமிழ் மூவாயிரம் அருளிய திருமூலர் "ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை" என கூறுகிறார்.

யானை உருவம் ஓங்கார வடிவின் அடையாளமாகவும் நினைவாற்றல், பொறுமை,மன வலிமை யின் உருவகமாக உள்ளது. இதனையே பிள்ளையார் கொண்டுள்ளார்.

"பண்ணியம் ஏந்தும் கரம் தனதாக்கிப்
பானிலா மருப்பமர் திருக்கை "
–என்ற தணிகை பாடல் அவரின் கரங்களை வரிசைப்படுத்தி அதன் பொருளை நமக்கு விளக்குகிறது.

விநாயகரே குருவாக வந்து அருள் பாலிப்பார் என்பதை ஔவைப்பிராட்டியார்

"குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடி வைத்து"
எனக்கூறி உணர்த்துகிறார்.

பிள்ளையார் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்

புல்+ஐ+ஆர்=புல்லையார் மருவி பிள்ளையார் ஆனது.
இதில் புல்–அருகம்புல் ஐ–தலைவன்,
வியத்தகு ஒன்று ஆர் –ஆன்றோன் ஆர் உயர் விகுதி
நோய்களை தீர்க்கும் மருத்தும் என்றும்

கணபதி – கணங்களின் பதி
கணம் – மக்கள் , மக்கள் கூட்டம்
பதி–தலைவன். என்ற பொருளிலும்

கணேசன்=கணம்+ஈசன்
விநாயகர்= வி(தலைவன்)+நாயகர் (உயர்ந்த தலைவர்)
என்ற விளக்கத்துடனும்

விநாயகர் என்ற சொல்லிற்கு ஏகம் இல்லாதவர் நாயகர் இல்லாதவர் அதாவது தனக்கு மேல் எந்த தலைவரும் இல்லாதவர் எல்லோருக்கும் மேலானவர் என்ற பொருளை நமக்கு உணர்த்துகிறது . மேற்கண்ட பிள்ளையார் கடவுளின் அனைத்து பெயர்களும் தூய தமிழ் பெயர்களே ஆகும். எனவே விநாயக பெருமான் தமிழ் தொன்மை கடவுளே ஆகும். இடையில் புகுத்தப்பட்ட வழிபாட்டு முறை அல்ல என்பது உறுதியாகிறது.

பிள்ளையார் சிலையின் பின்புறத்தில் பாம்புகள் பின்னியது போன்ற சிலைகளும் அவரின் முன்பு கீழே உள்ள நாக விக்கிரகங்களும் குண்டலினி யோகம் தத்துவத்தை உணர்த்தும். அருகம்புல், எருக்கம் மாலை இவைகள் மனித குலத்தின் நோய்களுக்கான தீர்வை தன்னகத்தே கொண்டவர் என்பதை உணர்த்த!

இப்போது ஜோதிடத்தில் உள்ள கேது பகவானுக்கு வருவோம்.



நிழல் கிரகமான கேது பகவான் நவக்கிரகங்களில் மிகவும் வலிமை வாய்ந்தவர். சூரியன் முதலான அனைத்து கிரகங்களையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டவர். இவரின் முக்கியமான காரகத்துவங்கள் என்பது ஞானம், தியானம், மௌனம், வைராக்கியம், சந்நியாசம், நிதானம், விடாப்பிடியான திடசித்தம் துறவறம் இவைகளாகும்.ஜோதிடத்தில் ஞான காரகன் மோட்சகாரகன் என்று குறிப்பிடபடுபவர் கேது பகவான்.

கேது பகவான் பொதுவாக உலகபந்தங்களில் இருந்து விடுபட உதவுவார்.பாவ விமோசனத்திற்கு அதிபதி இவரே. தன்னோடு சேர்க்கை பெறும் கிரகங்களின் காரகத்துவங்களை தன்னுள் ஒடுக்கி அவற்றை செயலிழக்க செய்யும் ஆற்றல் கொண்டவர் கேது. உதாரணமாக சுப கோளான சுக்கிரன் கேதுவுடன் மிக நெருக்கம் கொள்ளும் போது அவர் தனது காரகத்துவங்களான சுகபோகங்களை யும்,இல்லற ஈடுபாடு, கேளிக்கை, களத்திரம் சார்ந்த விசயங்கள் இவற்றை இழந்து விடுவார்.



ஜாதகருக்கு அவற்றில் நாட்டம் குறையலாம் அல்லது விருப்பம் இருப்பின் ஜாதகருக்கு அதனை கிடைக்க விடாமல் கேது செய்து விடுவார். இதன் மூலம் ஜாதகர்" பட்ட பின்பு ஞானி" ஆகும் நிலை தான்.

இவ்வாறாக ஒவ்வொரு கிரகத்திற்கும் அதனதன் காரகத்துவம் சார்ந்த நெருக்கடி களை ஏற்படுத்தி அதிலிருந்து விடுபட கேது உதவுவார்.

வெற்றிகரமான 5ஆம் ஆண்டில்

லக்னத்திற்கு 5ல் கேது பகவான் அமர்ந்து குரு வின் பார்வை ஏற்படும் போது, எதிர்காலத்தை கணிக்கும் ஆற்றல் உள்ளுணர்வு இவற்றை ஜாதகர் பெறலாம்.ஜாதகருக்கு காலப் போக்கில் படிப்படியாக இல்லற நாட்டம் குறைந்து ஞானி ஆவதற்கு விருப்பம் கொள்வார்.

நாளுக்கும் கோளுக்கும் அப்பாற்பட்ட விநாயகர் ஜோதிட சாஸ்திரப்படி கேதுவின் அம்சம். அளவிலா ஞானத்தை அளிக்கக் கூடியவர். கேதுவால் ஏற்படும் களத்திர தோஷம், மாங்கல்ய தோஷம், புத்திர தோஷம், கல்வித்தடை ஆகியவற்றை நிவர்த்தி செய்யக்கூடியவர். சந்திரனால் ஏற்படக்கூடிய தடைகள், தோஷங்களை போக்க கூடியவர். சந்திர பகவானும் தனது தோஷங்கள் நீங்கவும், தனது தேய்மானம் நீங்கவும் தேய்பிறை சதுர்த்தி தினத்தன்று ஸ்ரீ விநாயகப் பெருமானை நினைந்து கடும் தவம் செய்ய, சந்திரனின் கலைகள் எனும் பிறைகள் வளர அருள்பாலித்தார்.



தேய்பிறை என்றாலும் விநாயகரின் அருளால் சந்திரனுடைய தேஜஸ் வளர்ந்தது. அந்த நன்னாளைத் தான் நாம் சங்கடஹர சதுர்த்தியாக வழிபட்டு வருகின்றோம். சங்கடம் என்றால் இக்கட்டு, தொல்லைகள், கஷ்டங்கள், தடைகள் என்று அர்த்தம். ஹர என்றால் நீக்குவது என்று பொருள். சந்திர திசை, கேது திசை நடப்பவர்கள்

மாதந்தோறும் வரும் சங்கடஹர சதுர்த்தியிலும், விநாயகர் சதுர்த்தியிலும் பிள்ளையாரை வழிபட்டால் அனைத்துவிதமான தோஷங்களும் விலகும்.

அறியாமை என்னும் இருளில் இருந்து ஞானம் என்னும் ஒளியை நோக்கி அழைத்துச் செல்லும் ஞான பண்டிதன் கணேசர். அவரை மாணவர்கள் பக்தி சிரத்தையுடன் வழிபட்டால் தடைகள் நீங்கி கல்வியில் ஏற்றமும், ஞானமும், வளமையும் ஏற்படும்.

இதுவரையிலும் பிள்ளையார் வழிபாட்டு பிண்ணனி அதனுள் பொதிந்துள்ள சித்தர் நிலை, மானுட பிறப்பு விடுபடுதல் தத்துவம் இவற்றை யும் அதனுடன் ஜோதிடத்தில் கூறப்படும் கேது பகவானின் தொடர்பு பற்றிய புரிதலையும் வாசகர்கள் உணர்ந்து இருப்பீர்கள் என நம்புகிறேன். மீண்டும் மற்றொரு தலைப்பில் சந்திக்கலாம்.

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர். ஜோதிடம், தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர் தொடர்புக்கு : 9894176494



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# வாழ்த்தி மகிழ்வோம்...

**அன்பார்ந்த வாசகர்களே..**

நமது மின்னிதழில் வாழ்த்தி மகிழ்வோம் பகுதியில் வாசகர்கள் இனி தங்கள் குடும்ப உறுப்பினர்கள் திருமணம், பிறந்த நாள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் இன்னும் பல இனிமையான தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் வாசகர்களோடு பகிர்ந்து மகிழலாம்.

**அட்டைப்படம் மற்றும் இதழில் ஒரு பக்க செய்திக்கான கட்டணம் : ரூபாய் 3000 மட்டும்**

**இதழில் ஒரு பக்கச்செய்தி : ரூபாய் 500 மட்டும்**

இனிய தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் குடும்பங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

தங்களது இல்ல நிகழ்வுகளை வெளியிட
இதழின் மின்னஞ்சல் முகவரி
naamnagarathar@outlook.com
அல்லது
96590 32994 என்ற
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# சுப்பிரமணிய பாரதி (தீ)



எட்டயபுரத்தில் வந்துதித்த எட்டாத சூரியன்
எத்திக்கும் திகட்டாத தமிழ் பரப்பிய சூரன்

சின்னசாமி சுப்பிரமணிய பாரதி(தீ)!
அநியாயம் கண்டால் விழிகள் பரப்பும் அனல் பறக்கும் தீ!

தமிழினத்திற்கு விடுதலை உணர்வை விதைத்தாய்!
காக்கையும் குயிலையும் காதலையும் கவிதையாய் வடித்தாய்!

பராசக்தி பித்தனாய் உருவகம் செய்தது நின் எழுத்து!
எத்தர்களை எகத்தாளம் செய்யும் நினது சீரிய கருத்து!

தனியொருவனுக்கு உணவில்லை எனில்
செகத்தை அழிக்கத் துணிந்தாயே!
கழனியில் உதிரம் சிந்தும் உழவரது
அவலநிலை அறியாது போனாயே?

அநியாயம் கண்டு ஆவேசம் கொள்ளும்
சுட்டெரிக்கும் விழிகள் எங்கே?
நின்னைப்போல் வார்த்தைக்கனல் வீசும்
உள்ளம் வேறொருவருக்கு உண்டோ இங்கே?

வீரம் செறிந்தது நின் எழுத்து!
வேகமும் விவேகமும் ஊட்டும் அரிய விருந்து!
தலைமுறை தாண்டி நிற்கும் அரிய மருந்து!
நின் இழப்பினால் தமிழ்ம(இ)னமே வருந்து!

இந்தியாவில் முதன்முதலில் நாட்டுடைமை
பெற்ற சிறப்புக்குரியது நின் இலக்கியம்!
நின்னை சொற்களால் வடித்தெடுக்கவே
வேண்டுமோர் புது இலக்கணம்!!...



–அரு.சிவகாமி இராமநாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

# Carbon capture and storage (CCS) Carbon Credits.



– கார்த்திக் முத்தப்பன்
நகரத்தார் கேப்பிட்டல்

வணக்கம் .

வாசகர்களே ...!!

**இந்தத் தொடரில்**

- **Carbon capture and storage (CCS)?**
- **How it Helps to reduce the impact of emissions from energy–intensive industries.**
- **Carbon Credits?**
- **how do they work to help your business reach its climate goals.**
- **Carbon capture and storage (CCS) / Carbon Credits**
- **impact on Stocks**
- **How we can make them fruitful to us.**

குறித்த பயனுள்ள தகவல்களை அறிவோம்.

## கார்பன்கிரெடிட்கள்(CC) என்றால் என்ன?

கார்பன் கிரெடிட்கள் என்பது, கடன் உரிமையாளருக்கு ஒரு குறிப்பிட்ட அளவு கார்பன் டை ஆக்சைடு அல்லது பிற கிரீன்ஹவுஸ் வாயுக்களை (GHGs) வெளியேற்ற அனுமதிக்கும் அனுமதிகள் ஆகும். ஒரு கிரெடிட் ஒரு டன் கார்பன் டை ஆக்சைடு அல்லது பிற கிரீன்ஹவுஸ் வாயுக்களுக்கு சமமான வெளியேற்றத்தை அனுமதிக்கிறது.




கார்பன் கிரெடிட் அமைப்பின் இறுதி இலக்கு வளிமண்டலத்தில் GHGs களின் வெளியேற்றத்தைக் குறைப்பதாகும்.

## CCS (Carbon Capture and Storage), CCU (Carbon Capture and Utilisation), மற்றும் CDR (Carbon Dioxide Removal) என்றால் என்ன – அது ஏன் முக்கியமானது?




கார்பன் டை ஆக்சைடு அகற்றுதல்(CDR), கார்பன் பிடிப்பு மற்றும் சேமிப்பு(CCS), மற்றும் கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு(CCU) ஆகியவை 'கார்பன் மேலாண்மை'(Carbon Management) என்ற பரந்த குடும்பத்தின் முறைகள் என்றாலும், கையாளப்பட்ட CO2 இன் மூலத்திலும் சேருமிடத்திலும் அவற்றின் முக்கியமான வேறுபாடு காரணமாக அவை காலநிலை மாற்றத்தில் வெவ்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. பயனுள்ள காலநிலை நடவடிக்கையை செயல்படுத்த, பசுமை சலவை(Green Washing) செய்வதைத் தவிர்க்க மற்றும்

பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த இந்த சொற்களின் தெளிவான வேறுபாடுகள் அவசியம்.

### கார்பன் பிடிப்பு மற்றும் சேமிப்பு / Carbon Capture and Storage (CCS)

கார்பன் பிடிப்பு மற்றும் சேமிப்பு (Carbon capture and storage) என்பது தொழில்துறை வெளியேற்றங்களிலிருந்து CO2 ஐப் பிரிப்பதாகும், மேலும் அந்த கார்பனின் நிரந்தர புவியியல் சேமிப்போடு இணைந்து(பயன்படுத்தப்படுகிறது, எ.கா., சிமென்ட், எஃகு, மின் உற்பத்தி நிலையங்கள், இரசாயன உற்பத்தி வசதிகள் போன்றவை). CO2 இன் தோற்றம் பிரத்தியேகமாக புதைபடிவ அல்லது புவியியல் கார்பனாக (எ.கா., புதைபடிவ எரிபொருள்கள்/fossil fuels, சுண்ணாம்புக்கல்/limestone) இருக்கும்போது, இந்த நடவடிக்கை கார்பன் அகற்றுதல் அல்ல, உமிழ்வைக் குறைப்பதாகும். கார்பன் டை ஆக்சைடு அகற்றுதல் மற்றும் Carbon capture and storage வேறுபட்டவை, ஆனால் சில கார்பன் டை ஆக்சைடு அகற்றும் முறைகள் (எ.கா.,நேரடி காற்று பிடிப்பு) வழக்கமான Carbon capture and storage க்கு பயன்படுத்தப்படும் அதே பிடிப்பு செயல்முறைகள் அல்லது நீண்டகால சேமிப்பு உள்கட்டமைப்பைப் பகிர்ந்து கொள்ளலாம்.

### கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு / Carbon Capture and Utilisation (CCU)

கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு என்பது 'கார்பன் மறுசுழற்சி' பயன்பாடுகளின் பரந்த தொகுப்பின் ஒரு பகுதியாகும், இது கைப்பற்றப்பட்ட கார்பனை நேரடியாகவோ அல்லது புதிய தயாரிப்புகளில் ஒரு மூலப்பொருளாகவோ (எ.கா., கான்கிரீட்,

எரிபொருள்கள், ரசாயனங்கள்) மீண்டும் பயன்படுத்துவதை விவரிக்கிறது. Carbon capture and utilisation கூடுதல் புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டை இடமாற்றம் செய்யலாம், இதன் மூலம் உமிழ்வைக் குறைக்கலாம். கார்பன் வளிமண்டலத்திலிருந்து அகற்றப்பட்டு பல தசாப்தங்கள் அல்லது நூற்றாண்டுகளாக மூடிய சுழற்சியில் இருந்தால் (எ.கா. சிமென்ட் கட்டுமானப் பொருட்களில் இணைக்கப்படும்போது), இந்த முறை அகற்றப்படுவதாகக் கருதப்படலாம்.கார்பன் வளிமண்டலத்தில் விரைவாக (மீண்டும்) வெளியிடப்படும் Carbon capture and utilisation இன் மற்ற அனைத்து நிகழ்வுகளும், (மீண்டும்) உமிழ்வுகளை மட்டுமே தாமதப்படுத்துகின்றன. கைப்பற்றப்பட்ட பெரும்பாலான கார்பன் நீடித்து நிலைத்திருக்காததால், Carbon capture and utilisation பொதுவாக அகற்றப்படுவதாகக் கருதப்படுவதில்லை.

## பசுமை இல்ல வாயுவை உரமாக்குவதற்கு கார்பன் டை ஆக்சைடு அகற்றுதல் /Carbon Dioxide Removal (CDR)

கார்பன் டை ஆக்சைடு அகற்றுதல் என்பது " வளிமண்டலத்திலிருந்து CO2 ஐ அகற்றி, புவியியல், நிலப்பரப்பு அல்லது கடல் நீர்த்தேக்கங்கள் அல்லது தயாரிப்புகளில் நீடித்து நிலைத்திருக்கும் வகையில் சேமித்து வைக்கும் மானுடவியல் நடவடிக்கைகளை/செயல்பாடுகளை." Intergovernmental Panel on Climate Change(IPCC) குறிக்கிறது.

அகற்றுதல்கள்

1)நிகர உமிழ்வைக் குறைப்பதை துரிதப்படுத்தலாம் (உடனடியாக),

2)உமிழ்வை 'கடினமாக குறைக்க' நெருங்கியகால எதிர் சமநிலைப்படுத்தலாம், மற்றும்

3)நீண்ட கால நிகர எதிர்மறை உமிழ்வை வழங்கலாம். கார்பன் அகற்றுதல்கள் "எதிர்மறை உமிழ்வுகளை" உருவாக்குவதற்கு வழிவகுக்கும், அவை நமது காலநிலை இலக்குகளை அடைவதில் முக்கியமானவை IPCC இன் வார்த்தைகளில்.

"நிகர பூஜ்ஜிய(Net Zero) CO2 அல்லது கிரீன்ஹவுஸ் வாயு (GreenHouse Gas) உமிழ்வை அடைய வேண்டுமானால், எஞ்சிய உமிழ்வை சமப்படுத்த CDR ஐப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாதது"

காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கான ஒரு பயனுள்ள, நெறிமுறை மற்றும் அளவிடக்கூடிய வழிமுறையாக அதை எவ்வாறு உருவாக்கி பராமரிக்க முடியும் என்பது குறித்து CDR இன் பயன்பாடு தற்போது பல தடைகளையும் நியாயமான கேள்விகளையும் எதிர்கொள்கிறது.

லட்சிய உமிழ்வு குறைப்புகளுக்கான தேவையை மிகைப்படுத்த முடியாது என்றாலும், CDR இன் தேவையும் தெளிவாக உள்ளது.

CDR இன் முழு ஆற்றலையும் வாய்ப்புகளின் வரம்பையும் திறப்பது பயனுள்ள அரசியல் விவாதங்கள் மற்றும் அது என்ன, என்ன அல்ல என்பதற்கான தெளிவான வேறுபாடுகளுடன் தொடங்குகிறது.

– தொடரும்




GET IT ON Google Play

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

# நாம் நகரத்தார்

**சமூக இணையதள மின்னிதழ்**

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

# 97917 76534

www.naamnagarathar.com